Regisered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி-13 | 28-12-2005 | புதன்கிழமை | ஓசை-313

உங்கள் நிறுவனங்களின்
உள்ளக தொலைபேசி
இணைப்புக்களுக்கு...

கிளிநொச்சியில்
அதிக நிறுவனங்களுக்கு
உள்ளகத் தொலைபேசி
இணைப்புக்களை ஏற்படுத்தியவர்கள்.

நொதேன் ரெக்னோலஜி
பிறைவேட் லிமிட்டட்
இல:52, 2ஆம்குறுக்குத்தெரு, வவுனியா.
தொலைபேசி : 024-2221649.
இல: 20, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி : 021-2225653.(ச-13518)

# மாமனிதர் ஜோசப் பரராசசிங்கத்தின் புகழுடலுக்கு தேசியத் தலைவர் இறுதிவணக்கம்





நேற்று மாலை கிளிநொச்சிக்கு எடுத்துவரப்பட்டு தூயவன் அரசறிவியற்கல்லூரியில் வைக்கப்பட்டிருந்த மாமனிதர் ஜோசப்பரராசசிங்கம் அவர்களின் புகழுடலுக்கு தமிழீழதேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் தனது இறுதி வணக்கத்தைச் செலுத்தினார்.

# பருத்தித்துறையில் கிளைமோர் தாக்குதல் பன்னிரு படையினர் பலி; ஐந்து பேர்காய

## ஆபத்தான நிலையில் சிலர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பருத்தித்துறை வீதியின் முதலாம் கட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவ வாகனம் மீது நற்று மதியம் நடாத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் பன்னிரண்டு படையினர் உயிரிழந் ள்ளனர். ஐவர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களில் சிலரின்நிலை மோசமாக இருப்பதாகப் டைத்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

பருத்தித்துறை நகரப்பகுதியில் மைந்துள்ள சிறிலங்கா இராணுவத் ன் 52-4 படைத்தளத்திலிருந்து ப்பட்டுச் சென்ற இராணுவ வாக னத்தை இலக்குவைத்தே இக்கிளை மோர் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. நண்பகல் 12.30 மணியளவில் இத் தாக்குதல் இடம்பெற்றது.

காயமடைந்த படையினரில் நால் வர் பருத்தித்துறை ஆதார வைத்திய

(12ஆம் பக்கம் பார்க்க)

## டையினரின் துப்பாக்கிச்சூட்டில் மூன்று பொதுமக்கள் படுகாயம்

யாழ். பருத்தித்துறையில் சிறிலங் ப் படையினர் பொதுமக்கள் மீது ற்று கண்மூடித்தனமான தாக்கு ல மேற்கொண்டனர்.இதில் மூன்று துமக்கள் படுகாயத்திற் குள்ளா ர்.

பகல் 12.50 மணியளவில் இத் தாக்குதல் இடம்பெற்றது. கிளைமோர் தாக்குதலையடுத்து வீதிப் பாது காப்பில் ஈடுபட்டிருந்த படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாமனிதரின் புகழுட போராளிகள், மக்கள் இ

(நமது நிருபர்)

மாமனிதர் ஜோசப்பரராசசிங்கம் அவர்களின் புகழுடல் நேற்று விடு தலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகு திக்கு எடுத்துவரப்பட்டு இறுதி வணக் கத்திற்காக புளியங்குளம், கனகரா யன்குளம், மாங்குளம் இ களில் வைக்கப்பட்டது தலைப்புலிகளின் தள சார் பொறுப்பாளர்க மக்கள் கலந்து இறுதி வணக்கத் கள்.

## ஈழத்தமிழர் பாதுகாப்புக் கூ சென்னையில் நாளை நடை

திராவிடர் கழகம் சார்பில் ஈழத்தமிழர் பாது 29ஆம் திகதி சென்னையில் நடைபெறுகிறது. திடலில் நடைபெறும் இந்தப்பொதுக்கூட்டத்தி கி.வீரமணி தலைமை வகிக்கிறார்.தமிழர் தே மாறன் முன்னிலை வகிக்கிறார். பாட்டாளி ராமதாஸ், மறுமலர்ச்சி திராவிட முன் வைகோ ஆகியோர் சிறப்புரையாற்றுகி துள்ளது.

## தமிழ்மக்கள் மீதான இனவெறித் தாக்குதலை ங்களப்படை நிறுத்தாவிட்டால் தொடர் தாக்குதல்

### - பொங்கியெழும் மக்கள்படை எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

ிங்களப் படையின ல் கொல்லப்பட்ட தமிழ் மக்க ளுக சமர்ப்பணமாக பருத்தித்துறையில் தாக்குதல் நடத் தியுள்ளோம். இனியும்,சிங்களப்படை தமிழ்மக்கள் மீதான தாக்குதலை நிறுத்தாவிட்டால் தொடர்ச்சியான தாக்குதல் களை நடத்துவோம் என்று யாழ். பொங்கியெழும் மக்கள் படை நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அது வெளியிட்டுள்ள அறிக்கை யில்:-இந்த மரண அடியை.அடிதரும் செய்தியை சிறி லங்காப் படைத்தரப்பினர்

(12ஆம் பக்கம் பார்க்க)

பல

எஞ்

# வரிவிளம்பரம்

## புதிய கணினி வகுப்புகள் ஆரம்பம்

(K.S.K கணினி நிலையம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு) E.C.E(O/L) எழுதிய மாணவர்களுக்கும் ஏனையோருக்குமான MS-OFFICE வகுப்புகள் ஆரம்பம்:-27,28.12.2005 மாலை 5.00 மணி காலம்:- 03 மாதங்கள் வகுப்பு நாட்கள் வாரத்தில் ஐந்து நாட்கள் இரண்டு மணித்தியாலங்கள் வீதம் நடைபெறும். பயிற்சி முடிவில் அரச அங்கீகாரமும், சர்வதேச அங்கீகாரமும் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும் நிர்வாகி. (7180)

## இறப்பர் முத்திரை

பொலிமர் இறப்பர் முத்திரை உடன் செய்து பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம் வாணி புத்தகசாலை (பிக்பென்ஸ்) கனகபுரம் டிப்போ வீதி, கிளிநொச்சி. (சி-13264)

## கணினிக்கற்கை நெறிகள் ஆரம்பம்

நிலவு கணினித் தொழில்நுட்பம், தமிழீழ வைப்பகத்திற்கு பின்னால் கிளிநொச்சி, 22.12.2005ஆம் திகதிய ஈழநாதம் பத்திரிகை விளம்பரத்திற்கு ஏற்ப 01.01.2006 அன்று மாணவர்கள், வேலைசெய்வோருக்கு கற்கைநெறிகள் ஆரம்பமாகவுள்ளன. பதிவினை மேற்கொள்க. (சி-13659)

## விற்பனைக்குண்டு

5ஆம் கட்டை, அளம்பில் முல்லைத்தீவில் 49 ஏக்கர் தென்னந்தோட்டக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு-காந்திமதி சிதம்பரப்பிள்ளை மே/பா சி.சிவசுப்பிரமணியம், 5ஆம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு. (6967)

## ஆங்கிலப்பேச்சு வகுப்பு ஆரம்பம்

இது O/L பரீட்சை எழுதியவர்களுக்கான ஆங்கிலப்பேச்சு வகுப்பு- ஆசிரியர் - இ.றஜித், காலம் 28.12.2005 இன்று நேரம் காலை 9.00 மணி இடம் வைத்தியசாலை அருகில் முல்லைத்தீவு வீதி, புதுக்குடியிருப்பு. (7185)

## தவறிவிட்டது

NPGY 9954 எனும் இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் அனுமதிப் பத்திரம், பெயர் மாற்றீடுப்படிவம், வங்கிப்புத்தகம் மற்றும் பல ஆவணங்கள் அடங்கியதான பை ஒன்றுடன் இலங்கை வங்கிக்கும், கோவிந்தன் கடைச்சந்திக்கும் இடையில் 27.12.2005தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையிலோ அல்லது புலிகளின்குரல் நிறுவனத்தில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகிறார். (7192)

# மக்களைச் சீண்டி கொந்தளிப்பை ஏற்படுத்தி இன அழிப்பை மேற்கொள்ள அரசு முயற்சிக்கிறது

## வடகிழக்கு மனித உரிமைகள் செயலக இயக்குனர்

(அலுவலக செய்தியாளர்)

மக்களைச் சீண்டி பீதிகளையும் கலவரங்களையும் ஏற்படுத்தி அவர்களைக் கொந்தளிக்கச் செய்வதன் மூலமே இனஅழிப்பை இலகுபடுத்தும் தந்திரோபாயத்தை சிறிலங்கா அரசாங்கமும் இராணுவமும் கையாண்டு வருகிறது

இவ்வாறு வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலக இயக்குனர் கருணாரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் நடைபெற்றுவரும் படுகொலைகளையும், மாமனிதர் ஜோசப் பரராசசிங்கத்தின் படுகொலையையும் கண்டித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்; இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராசசிங்கம் படுகொலை செய்யப்பட்டது ஒரு காட்டுமிராண்டித்தனமான செயல். இதுதற்செயலான செயல் அல்ல திட்டமிடப்பட்டு இப்படுகொலை செய்யப்பட்டிருக்கின்றது. இதற்கான முழுப்பொறுப்பை இன்றிருக்கின்ற சனாதிபதியும், அரசும், இராணுவமும் ஏற்றே ஆகவேண்டும். இது எமக்கொரு தெளிவான செய்தியை மீண்டும் மீண்டும் சொல்லுகிறது. மட்டக்களப்பிலே நாங்கள் மனிதஉரிமைப்பணியைச் செய்கின்ற பொழுது ஒன்றரை ஆண்டு காலமாக மனித மேம்பாட்டுக்காக அக்கறையாக செயற்படுகின்ற வேளையிலே எமது இன்னுமொரு உறுப்பினரை நாம் இழந்திருக்கின்றோம். அமரர் சந்திரநேரு அவர்களை மனிதஉரிமை ஆர்வலர் என்பதற்காக அவரை சுட்டுக் கொன்றார்கள். அவரது வெற்றிடத்தை நிரப்பமுடியாமல் நாம் தவித்துக்கொண்டிருகின்ற வேளையில் இப்போது மனிதஉரிமைகள் பற்றிய அனைத்துவிடயங்களையும் அறிந்த ஒருவரைக் கொலை செய்திருக்கின்றார்கள். ஆகவே இக்கொலையின் முழுப்பொறுப்பையும் இந்த அரசாங்கம் ஏற்றே ஆகவேண்டும்.

விசாரணை செய்வதாகவும், குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதாகவும், வழமையாகச் சொல்கின்ற ஒரு செயற்பாடு தான் சிறிலங்காவின் பாரம்பரியமாக நிலவி வருகின்றது. அமரர் குமார் பொன்னம்பலத்தை கொழும்பின் மத்திய நகரப்பகுதியிலே சுட்டுக்கொன்றார்கள் அந்த குற்றவாளிகளைக்கூட இதுவரைக் கண்டுபிடிக்கவில்லை. ஆகவே நத்தார் நள்ளிரவில் மகிழ்ச்சியான சமாதானத்தின் கீதம் பாடப்படுகின்ற வேளையில் கத்தோலிக்க தேவாலயத்திலே நிகழ்த்தப்பட்ட இந்தப்படுகொலையின் பின்னணியை சர்வதேசம் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். சர்வதேச மனித உரிமை ஆர்வலர்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். இந்தச் சம்பவத்தை அவர்கள் புறக்கணித்து கண்டும் காணாமல் விடுவார்களேயானால் சர்வதேச சமூகமும், சர்வதேச மனித உரிமை ஆர்வலர்களும், உள்ளூர் மனித உரிமை ஆர்வலர் குழுக்களும் இவ்வாறான படுகொலைகளுக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்று தான் எம்மால் கூற முடியும் எனத் தெரிவித்தார். (ச)

# இராணுவத்தால் கைது செய்யப்பட்ட ஆறு பேர் காணாமல் போயுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

இம்மாத நடுப்பகுதியில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட கொக்குவிலைச் சேர்ந்த ஆறுபேர் காணாமல் போயுள்ளனர்.இம்மாதம் 17ஆம், 23ஆம் திகதிகளில் கொக்குவில் பகுதியைச் சுற்றி வளைத்த சிறிலங்காப் படையினரால் மேற்படி ஆறு இளைஞர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர். ...வ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக இதுவரை எந்தத் தகவலும் ...டைக்கவில்லை. படையினர் தாம் கைது செய்தவர்கள் அனைவரையும் ...லிசாரிடம் கையளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். ஆனால் பொலிசார் ...டம் இவர்கள் கையளிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கின்றனர். இந்த ...யில் இவர்கள் என்ன ஆனார்கள் என்ற அச்சம் நிலவுகின்றது.இது ...ு மனித உரிமைக்குழுவிடம் முறையிடு செய்யப்பட்டுள்ளது. (37)

# ...ப்பேரலை காவுகொண்டோருக்கு ...ிகண்டியில் நினைவு நிகழ்வு

(முறிகண்டி)

...லயால் காவு கொள்ளப்பட்ட பொதுமக்களுக்கு அஞ்சலி ...ு தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் முறிகண்டியில்

...சுடரினை திருமுறிகண்டிப் பிரதேச அரசியல்துறைப் ...ற்றிவைக்க, பிரதான ஈகச் சுடரினை திருமுறிகண்டி ...் குசைநாதன் ஏற்றிவைத்தார்.பொதுமக்கள் ஏனைய

...ந்து நிகழ்த்தப்பட்ட நினைவுரைகளை கிராம ... இராஜேந்திரன், வர்த்தக சங்கத்தலைவர் ... தலைவர் இராசேந்திரன்,தேசிய எழுச்சிப் ...யோர் சங்கத் தலைவர் அருளம்பலம், ...தாசிவம், தேசிய இளைஞர் சேவை ...ேழ்த்தினர். இந்நிகழ்வில் பெருமளவு ...தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ...சென்ற பாரவூர்திகள் ...று மோதி விபத்து

## ...ட்டில் சம்பவம்

...ாரிய விபத்தினால் சுமார் இரண்டு மணிநேரம் ...ுவரவிற்கு, இடையூறு ஏற்பட்டிருந்ததைக் காணக் ...ாக இருந்தது. ஒட்டுனர் பக்கமாக இரண்டு ...களும் சேதமடைந் திருந்தன.

...ு விபத்தில் படுகாயமடைந்த நபரான ரமேஷ்



...வைத்தியசாலைக்கு எடுத்துச் (19)

# மாமனிதர் ஜோசப் படுகொலை சதிகாரரின் கோழைத்தனச் செயல்

## - யாழ். மாவட்ட பா.உ.சிவநேசன்

(யாழ்ப்பாணம்)

மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் படுகொலை செய்யப்பட்டது சமாதான சூழலை குழப்பும் சதிகாரரின் கோழைத்தனமான செயலென யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன் தெரிவித்துள்ளார்.

மாமனிதர் ஜோசப் பரராசசிங்கத்தின் இழப்பு தமிழ் பேசும் மக்களின் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு என்பதை தாயக மக்கள் வாழும் தேசமெங்கும் அவரின் இழப்பினை அறிந்து துயருறும் தமிழ் பேசும் மக்களின் உணர்வுகள் மூலம் சர்வதேசமும், தென்னிலங்கையின் இனவாத சக்திகளும் உணர்ந்திருக்கும்.

தமிழ் இனத்தின் சிறந்த வழிகாட்டியாக, தமிழ்பேசும் இனம் விடுதலைபெறவேண்டும் என்பதில் வேட்கை கொண்டவராக, தமிழ் தேசிய வலுவுக்கு வலுச்சேர்த்த பெருமகனாக, சிங்கள மக்களுடன் தமிழ்பேசும் மக்கள் இணைந்து வாழமுடியாத யதார்த்தத்தை உணர்ந்தவராக அரச பயங்கரவாதத்தைக் கண்டித்து மனித உரிமைகள் பேணப்பட வேண்டும் என்பதில் உறுதியுடன் உழைத்த உத்தமராக தாயக நிலப்பரப்பிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் பேசும் இனத்தின் உரிமைக்குரலை உலகுக்கு உணர்த்தும் உயரிய இலட்சியம் கொண்டவராக ஆற்றலும், அறிவும், நேர்மைத்திற னும்,அரசியல் இராஜதந்திரமும் மிக்கவராக எம்மிடையே எப்படி உயர்ந்த மனிதப்பண்புடன் வாழ வேண்டுமென வாழ்ந்து காட்டிய உயர் பண்பாளனை பண்பற்ற கொடூரர் கொலை செய்து விட்டனர்.

இக்கொடூரச்செயல் திட்டமிட்டு அரச படைகளாலும், அவர்களுடன் சேர்ந்த ஒட்டுக்குழுக்களாலும் செய்யப்பட்டமையை மறைக்க முயலும் சிறிலங்கா அரசின் தவறான செய்திகள் மேலும் எமது மக்களின் உணர்வினை தூண்டுவதாகவுள்ளது. இக்கொலை சமாதானசூழலுக்கு விழுந்த வேட்டு என்பதை உணர்ந்து கொண்டு உயர்பாதுகாப்பு இராணுவ பிரதேசத்தில் நடைபெற்ற இக் காட்டுமிராண்டித்தனமான செயலுக்கு சிறிலங்கா அரசே முழுப்பொறுப்பினையும் ஏற்க வேண்டும். இதுபோன்ற செயல்கள் தொடருமானால் அரசே போருக்கு தமிழ் பேசும் மக்களைத் தூண்டுகின்றது என்பதே பொருளாகும் எனத் தெரிவித்தார்.

# பிற்போடப்பட்டது

(அலுவலக செய்தியாளர்)

இன்று நடைபெற இருந்த கிளிநொச்சி மாவட்ட மாவீரர் உதைபந்தாட்டப் போட்டி மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் அவர்களின் அஞ்சலி நிகழ்வின் காரணமாக போட்டிகள் யாவும் பிற்போடப்பட்டு போட்டி நிரலின்படி நாளை முதல் தொடர்ந்து நடைபெறும் எனக் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (கு)

# இறுதிப்பரீட்சை

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியின் 2006 ஆம் ஆண்டி... உள்ளகப்பயிற்சியை மேற்கொள்ளவிருக்கும் முகிழ்நிலைஆசிரியர்கள் தமது நியமனக் கடிதத்தையும் ஏனைய ஆவணங்களையும் 01.01.2006ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கல்லூரிக்கு வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். இவர்களுக்கான இறுதிப்பரீட்சை 16.01.2006 முதல் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாம் தவணை எதிர்வரும் 02.01.2006திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. எனவே முகிழ் நிலை ஆசிரியர்கள் 01.01.2006 மாலை 4.00 மணிக்கு விடுதிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்

# சுனாமியால் பாதிக்கப்பட்ட 17 பிள்ளைகளுக்கு கணக்கு வைப்பு

(முல்லைத்தீவு)

முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தினால் வெளிநாட்டில் புலம் பெயர்ந்துவாழும் தமிழ் அன்பர் ஒருவரின் நிதியுதவியுடன் சுனாமியில் தாய், தந்தையரை இழந்த 17 பிள்ளைகளுக்கு 1000 ரூபா வைப்பிலிடப்பட்டு தமிழீழ வைப்பகக் கணக்குப் புத்தகம் வழங்கும் நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்றது.

முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசக் கேட்போர் கூடத்தில் சமாசத் தலைவர் மரியராசா தலைமையில் ஆரம்பமானது. இந்நிகழ்வில் கருத்துரைகளை முல்லை. மாவட்ட வைத்திய அதிகாரி தர்மேந்திரா, முல்லை. நகரத் தமிழீழ கடற்படையின் தளபதி க.தினேஸ் ஆகியோர் வழங்கினார்கள்.தொடர்ந்து வைப்புக்கணக்கு புத்தகங்களை முல்லை. மாவட்ட வைத்திய அதிகாரி தர்மேந்திரா, முல்லை நகரத் தமிழீழ கடற்படைத்தளபதி க.தினேஸ் ஆகியோர் வழங்கினார்கள். சுனாமியால் தாய், தந்தையினரை இழந்த 163 பிள்ளைகளுக்கு ஏற்கனவே இவ்வாறான வைப்புப் புத்தகங்கள் வழங்கப்பட்டதாகவும் நேற்று 05ஆவது தடவையாக 1... பிள்ளைகளுக்குமாக மொத்தம் 18... பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டதோடு தொடர்ந்தும் தமிழ் அன்பர்களின் ஆதரவுடன் வழங்கவுள்ளதாகவும் சமாசத்தலைவர் தெரிவித்தார். (2...

# அண்ணனுக்கு எதிராக சாட்சி சொல்லமாட்டேன்

# அப்ரூவராக மாற சதாம்ஹூசைனின் தம்பி மறுப்பு

(பாக்தாத்)

**சதாம்ஹூசைன் மீதான வழக்கில் அரச தரப்புச் சாட்சியாக மாற மாட்டேன் என் அண்ணனுக்கு எதிராக சாட்சி சொல்லமாட்டேன். ஈராக் அரசு கொடுக்கும் பதவியை ஏற்கமாட்டேன் என்று சதாம்ஹூசைனின் தம்பி மறுத்துவிட்டார்.**

சதாம்ஹுஃசைன் ஆட்சிகாலத்தில் நூற்றுக் கணக்கான ஷியா முஸ்லிம்களைக் கொன்று குவித்ததாகஅவர் மீதும் அவர் தம்பி பர்கான் இப்ராகிம் அதிக்ரிதி உட்பட எட்டுப் பேர் மீது பாக்தாத் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கில் அரச தரப்புச் சாட்சியாக மாறும்படி சதாம்ஹுஃசைனின் தம்பிபர்கானை அமெரிக்கப் படையினர் வற்புறுத்தியுள்ளனர். அரச தரப்புச் சாட்சியாக மாறி ஹுஃசைனுக்கு எதிராகச் சாட்சி சொன்னால் ஈராக் அரசில் முக்கிய பதவி கொடுப்பதாகவும் அமெரிக்கப் படையினர் ஆசைவார்த்தை காட்டியுள்ளனர்.

ஆனால் அரச தரப்புச் சாட்சியாக மாறவும் சதாமுக்கு எதிராகச் சாட்சி சொல்லவும் பர்கான் மறுத்து விட்டார். "அவர் எனது அண்ணன் மட்டுமல்ல ஈராக்கின் அதிபர்" என்று நீதிமன்றிலும், பர்கான் கூறிவிட்டார் என்று அவரது சட்டத்தரணி தெரிவித்தார்.

பர்கான் நீதிமன்றில் சாட்சியம் அளிக்கும் போது சாதம் ஹுஃசைன் பதுக்கி வைத்த பணம் எங்கே என்று கேட்டு அமெரிக்கப் படையினர் அடித்து உதைத்து சித்திரவதை செய்தனர் என்றும் தெரிவித்தார்.

## ஷியா முஸ்லிம் மதகுரு பக்ரைனில் கைது

(டுபாய்)

பக்ரைனில் ஷியா முஸ்லிம் மதகுரு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. பக்ரைன் நாட்டைச்சேர்ந்த ஷேக்முகமது என்ற ஷியா முஸ்லிம் மதகுருவே கைது செய்யப்பட்டுள்ளார். இவர் ஈரான் நாட்டுக்குச் சென்ற பின்பு நேற்று முன்தினம் நாடு திரும்பினார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். இதை எதிர்த்து விமான நிலையத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பொலிசார் அவர்களைக் கலைக்க முயன்றனர். அப்போது இருதரப்புக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாக தெரிவிக்கப் படுகின்றது..

## வர்த்தக அங்காடியில் விசவாயு; ரஷ்யாவில் 80 பேர் பாதிப்பு

ரஷ்யாவில் வர்த்தக அங்காடி ஒன்றில் ஏற்பட்ட இரசாயனவாயுக்கசிவால் 80 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு எற்பட்டுள்ளது

ரஷ்யாவில் புதுவருட விடுமுறை ஆரம்பமாகியுள்ள நிலையில் வர்த்தக அங்காடியில் வாடிக்கையாளர்கள் அதிகமாகக் காணப்பட்டனர்.

அவ்வேளை திடீரென இரசாயன வாயுக்கசிவு ஏற்பட்டுள்ளது. இதனைச் சுவாசித்த சுமார் 80 பேர் சுவாசக்கோளாறு மற்றும் வாந்தி போன்ற உபாதைகளுக்கு ஆளாகினர். இது தொடர்பான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அந் நகரின் பாதுகாப்புத் துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.



சீனாவில் கேளிக்கை விடுதியில் கிறிஸ்மஸ் தினத்தன்று ஏற்பட்ட தீ விபத்தில் சேதமடைந்த பகுதியைப் படத்தில் காணலாம்.

## ஈராக்கில் இரு வேறு தாக்குதல் பத்து பொலிசார் பலி மூன்று பேர் காயம்

(பாக்தாத்)

ஈராக்கில் தீவிரவாதிகள் நேற்று நடத்திய இருவேறு தாக்குதல்களில் பத்துப் பொலிசார் பலியாகியுள்ளனர். மூன்று பொலிசார் காயமடைந்துள்ளனர்.

ஈராக்கில் பாக்தாத் அருகேயுள்ள புக்ரிஸ் என்ற இடத்தில் சோதனைச்சாவடி அருகே நின்ற பொலிசாரை நோக்கி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இதில் ஐந்து பொலிசார் பலியானார்கள், மூன்று பேர் காயமடைந்தனர். பொலிசார் சுட்டதில் ஆறு தீவிரவாதிகள் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தபாப் கிராமத்தில் காலையில் பொலிசார் வேலைக்கு புறப்பட்டபோது அவர்களை நோக்கி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் ஐந்து பொலிசார் பலியானார்கள்.

## இந்தோனேஷியா சனாதிபதிக்கு கொலை அச்சுறுத்தல்

### -உளவுத்துறை நிர்வாகம் அறிக்கை


இந்தோனேஷிய சனாதிபதிக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக உளவுத் துறை நிறுவனத்திடமிருந்து அறிக்கை கிடைக்கப் பெற்றிருப்பதாக அவரது பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதுவருட தினத்தையொட்டி கிளர்ச்சியாளர்களால் தாக்குதல்கள் நடத்தப்படக்கூடும் என அஞ்சி நாடளாவிய ரீதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த மாதம் ஜமா இஸ்லாமிய தீவிரவாத வலைப்பின்னலுடன் தொடர்புடைய முக்கிய நபரான மலேசிய குண்டு தயாரிப்பாளர் அஷ்காரிமுசை கொலை செய்யப்பட்டதையடுத்து நத்தார் தினத்தினையொட்டி முஸ்லிம் சனத்தொகை கூடுதலாகவுள்ள பகுதிகளில் பாதுகாப்புப்படையினர் உஷார் நிலையில் குவிக்கப்பட்டுள்ளார்கள். தீவிரவாதிகள் இந்தக்காலப்பகுதியில் தாக்குதலை நடத்தத்திட்டமிட்டுள்ளதாக அஷ்காரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களிலிருந்து தெரியவந்ததையடுத்தே பாதுகாப்புப்பலப்படுத்தப்பட்டுள்ளது.

## மெக்சிக்கோவில் எரிமலை வெடித்துச் சிதறியது

அமெரிக்காவுக்கு அருகே உள்ள மெக்கிக்கோ நாட்டிலுள்ள இராட்சத எரிமலை வெடித்துச் சிதறியுள்ளது. இந்த எரிமலையில் இருந்து நேற்று கற்களும், சாம்பலும், வெளித்தள்ளப்பட்டன. புகையும், எழுந்தது. மூன்று கிலோமீற்றர் உயரத்திற்கு புகையும், சாம்பலும் எழுந்தன.

இதனால் அருகிலுள்ள நகரங்கள் பாதிக்கப்பட்டன.



இந்தியாவில் நாகை மாவட்டத்தில் சுனாமியால் பலியானவர்களின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அமைக்கப்பட்ட நினைவிடம்.

## இந்தோனேஷியாவில் சுனாமியால் பாதித்தவர்கள் மறு வாழ்வு கிடைக்காமல் கடும் தவிப்பு

(பாண்டா ஏஸ்)

இந்தோனேஷியாவிலுள்ள ஏஸ் மாகாணம் சுனாமித்தாக்குதலில் கடுமையாக பாதிக்கப்பட்டது. நிவாரணப்பணிகள் மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள அந்த நாட்டு அரசு கேட்ட தொகை கிடைத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் மறுவாழ்வு கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏஸ் மாகாணத்தில் கடந்த ஆண்டு சுனாமித் தாக்குதலின்போது இரண்டு இலட்சத்து 16ஆயிரம் பேர் இறந்தனர். 20 இலட்சம் பேர் வீடுகளை இழந்தனர். இந்த மாகாணத்தின் தலைநகரான பாண்டா ஏஸ் முற்றிலும் நாசமடைந்து தற்போது கண்ணுக்கு எட்டிய தூரம் இடிபாடுகளே காட்சியளிக்கிறது.

நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள 22 ஆயிரத்து 500 கோடி ரூபா வேண்டுமென இந்தோனேஷிய அரசு சர்வதேச அளவில் கோரிக்கை விடுத்தது. ஐ.நா.உதவியுடன் அந்த நாட்டுக்கு இது வரை 20 ஆயிரத்து 250 கோடி ரூபா நிதியுதவி கிடைத்து விட்டதாக ஐ.நா. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் ஏஸ் மாகாணத்திலும், பாண்டா ஏஸ் நகரிலும் பாதிக்கப்பட்ட மக்கள் இன்றைக்கும் தீவுக்கூட்டங்களை போல தனித்தனியாக அமைக்கப்பட்ட தற்காலிக குடியிருப்புகளிலேயே வசித்து வருகின்றனர். நிரந்தர குடியிருப்பு, வேலைவாய்ப்பு போன்றவை அவர்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. உலக உணவுத்திட்ட அமைப்பு ஏஸ் மாகாணத்தில் சீரமைப்பு பணியில் ஈடுபட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் 562.5 கோடி ரூபா செலவிடப்பட்டிருக்கும் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. இதிலும் 90கோடி ரூபா உலங்குவானூர்தி மற்றும் விமானங்களை இயக்கிய செலவுக்கு சென்றுள்ளது.117 கோடியே 72 ஆயிரம் தொன் உணவுப் பொருட்கள் விநியோகிக்க பயன்படுத்தப்பட்டு விட்டது. மீதித் தொகையில் சிறிதளவே சீரமைப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இன்னும் பல கோடி ரூபாய் செலவிடப்படாமல் அப்படியே உள்ளது. இந்தத் தொகை என்ன ஆனது எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்பத் தொடங்கியுள்ளனர். சீரமைப்புப் பணி 2009 ஆம் ஆண்டு வரை நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த நாள் வரை பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்வா சாவா போராட்டத்திலேயே காலம் கழிக்க வேண்டியிருக்கும் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேற்குக் கடற்கரைப் பகுதி முழுவதும் சாலை வசதி ஏற்படுத்த வேண்டும். பல்லாயிரக்கணக்கான வீடுகளைக் கட்டித் தர வேண்டும். சுத்தமான குடிநீர் விநியோகத்துக்கு குழாய்களை அமைக்க வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.

## இஸ்ரேல் பிரதமரின் இருதயத்தில் ஓட்டை மீண்டும் வைத்தியசாலையில் அனுமதி

(ஜெருசலேம்)

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷிரோனுக்கு மீண்டும் உடல் நலக் கோளாறு ஏற்பட்டுள்ளது. அவரை பரிசோதித்த வைத்தியர்கள் அவருக்கு இருதயத்தில் இரண்டு மில்லி மீற்றர் அளவுக்கு ஓட்டை விழுந்திருப்பதைக் கண்டு பிடித்துள்ளன. இதைத் தொடர்ந்து ஷெரோன் மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியர்கள் அவருக்கு சத்திரசிகிச்சை செய்து அந்த ஓட்டையை அடைக்க இருக்கின்றார்கள் காடெவர சேஷன் என்ற இந்த சத்திரசிகிச்சை மூலம் அவருக்கு இருதயத்திலுள்ள ஓட்டை யில் ஒரு குழாய் பொருத்தப் படவுள்ளது. ஏரியல் ஷரோன் விரை வில் குணமடைய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் வாழ்த்துத் தெரிவித்திருக்கின்றார். இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் கடந்த சில வாரங்களுக்கு முன் உடல் நலக் குறைவு ஏற்பட்டு மயங்கி விழுந்தார். பக்க வாதத்தால் பாதிக்கப்பட்ட அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். 77 வயதான ஏரியல் ஷரோன் சிகிச்சைக்குப் பிறகு மூன்று தினங்களுக்கு முன் வீடு திரும்பினார்.

## டாக்டர்களுக்கு 3 வருட சிறை: சீனாவில் புதிய சட்டம் அமுல்

(பீஜிங்)

டாக்டர்களுக்கு மூன்று ஆண்டு சிறைத் தண்டணை விதிக்கும் புதிய சட்டம் சீனாவில் அமுலுக்கு வந்துள்ளது.

வயிற்றில் வளரும் குழந்தை பெண் எனத்தெரிய வந்தால், அதை அழித்துவிடும் வழக்கம் சீனாவிலும் நடைமுறையிலுள்ளது. இதைத்தடுப்பதற்காக சீனா புதிய சட்டம் ஒன்றை கொண்டு வந்துள்ளது.

அதன் படி கருவிலுள்ள குழந்தை ஆணா, பெண்ணா என்பதை முன்கூட்டியே தெரிவிக்கும் டாக்டர்களுக்கும், மருத்துவ ஊழியர்களுக்கும் மூன்று ஆண்டு சிறைத் தண்டணையும், அபாராதமும் விதிக்கப்படும் என்று சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

அங்கு ஒவ்வொரு 100 பெண் குழந்தைகளுக்கும் 119 ஆண் குழந்தைகள் பிறக்கின்றன எனப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

# ஆழிப்பேரலை அனர்த்தத்தின் ஓராண்டு பூர்த்தியும் நிரந்தர வசிப்பிடங்களின்றித் தவிக்கும் மக்களும்

## முல்லை. மாவட்ட திட்டமிடல் மேம்பாட்டுக்கான செயலகம்

(புதுக்குடியிருப்பு)

**ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து ஓராண்டு பூர்த்தியாகிய போதும் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப்பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்கள் நிரந்தர வசிப்பிடங்களின்றித் தவிக்கும் அவலநிலையே காணப்படுகிறது. இவ்வாறு மாவட்ட திட்டமிடல் மேம்பாட்டுக்கான செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

2004 டிசெம்பர் 26ஆம் திகதி காலை 8.45 மணியளவில் சுனாமி முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப் பகுதிகள் யாவற்றையும் தாக்கியது. இருந்தபோதிலும் இதனுடைய வேகம் முல்லைநகரை அண்டிய பகுதிகளிலேயே மிக அதிகமாக இருந்ததுடன் அவ்விடங்களில் மிக மோசமான பாதிப்புக்களையும் அழிவுகளையும் ஏற்படுத்தியது.

3000இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டும் அதிக அளவிலான எண்ணிக்கை கொண்ட மக்கள் காணாமற்போயும் இழப்புகள் ஒருபுறமாகவும், மக்களின் வாழ்வாதார பொருளாதார வளங்கள் யாவும் சிதைக்கப்பட்டு, கிராமங்களின் சகலவித உட்கட்டுமானங்களும் முழுதாக அழிக்கப்பட்டன.

இப்பேரழிவை அரசு வெளியுலகிற்கு தெரியப்படுத்துவதில் அக்கறை ஏதும் காட்டவில்லை. மாறாக, தென்பகுதியில் நிகழ்ந்த அழிவுகளை மட்டும் பெரிதாகக் காட்டிக்கொண்டு உலக நாடுகளின் அனுதாபத்தையும் உதவிகளையும் பெறமுயற்சி செய்தது. அரசின் புறக்கணிப்பும் பாரபட்சமான செயற்பாடுகளும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

எமது நிர்வாகத்திற்கு உட்பட்ட வடக்கு-கிழக்கு பகுதிகளில் நாம் வலுவான ஓர் அரசை கட்டியெழுப்பியுள்ளோம். எமது படை பணிகள் மற்றும் சிவில் நிர்வாக அலகுகள் யாவும் துரிதமாகச் செயற்பட ஆரம்பித்தன. எமது பொறுப்பாளர்கள், போராளிகள், உள்ளூர் தொண்டர் ஸ்தாபனங்கள் விரைவாக ஒழுங்கமைக்கப்பட்டு துரிதகதியில் மீட்புப் பணிகள் ஆரம்பமாகின. சுனாமி தாக்கிய சில நிமிட நேரத்திற்குள் துறைசார் பொறுப்பாளர்களும், பல்வேறு பிரிவுப் போராளிகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் பொதுமக்களும் உடனடி மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

அவசரகால மீட்புப் பணி நடவடிக்கைகளை திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செலயகம் ஒருங்கிணைத்து செயலாற்றத் தொடங்கியது.

மெதுமெதுவாக உள்ளூர், அரச சார்பற்ற நிறுவனங்கள், தேசிய சர்வதேச நிறுவனங்கள், தொண்டர் அமைப்புக்களின் தனியார் பங்களிப்புக்கள் எனப் பல்வேறுபட்ட பக்கங்களிலிருந்து வகைவகையான உதவிகள் வந்துகொண்டிருந்தன. உடனடி நிவாரணப் பணியில் 100இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையான தொண்டர் அமைப்புக்கள் பங்களிப்புச் செய்திருந்தன. நூற்றுக்கு மேற்பட்ட தேசிய, சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் பன்னாட்டு வெளிவிவகார அமைச்சு உறுப்பினர்கள், ஐ.நா. சபை பிரதிநிதிகள், உத்தியோகத்தர்கள் என களநிலை பற்றி நேரில் ஆய்வு செய்து ஊடகங்கள் மூலமாக உண்மை நிலையை வெளிக்கொணர்ந்த காரணத்தால் உதவிகள் கிடைக்கத் தொடங்கின. முகாம் அமைக்கும் பணி அவசரகால செயலணிக்குழுவின் ஆலோசனை வழிகாட்டல், ஒருங்கிணைப்பு, திட்டமிடல் என்பவற்றை உள்ளடங்கலாகக் கொண்டு பல்வேறு நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டது.

அழிவுற்ற கிராமங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கெனவும், மக்களின் வாழ்வாதாரப் பொருளாதார நிலைகளை மேம்பாடுத்துவதற்கும் பல்வேறுபட்ட உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள், தேசிய சர்வதேச நிறுவனங்கள், தொண்டர் அமைப்புக்கள் தாமாக முன்வந்தன. அவற்றிற்கான செயற்திட்டங்கள் திட்டமிடலுக்கும் மேம்பாட்டிற்குமான செயலகத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்டன.

பல நிறுவனங்கள் தமது பங்களிப்பைச் செய்வதாக ஒத்துக்கொண்டாலும் அவற்றை உரிய வேளைகளில் செய்து முடிக்காமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகவேயுள்ளது. சுமார் 5900 வீடுகளை அமைத்துத்தர முடியும் என இணங்கிய தொண்டர் நிறுவனங்கள் இற்றைவரை சுமார் 150 வரையிலான வீடுகளை மட்டும் கட்டும் பணியை ஆரம்பித்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்க விடயம். அதேவேளையில், உலக வங்கி யின் நிதியுதவியுடன் மக்கள் தாமாக வடகிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டத்தின் கீழ் வீடுகளை அமைக்க ஆரம்பித்தனர். ஆனால், அந்நிதியுதவி வீடுகளைப் பூரணப்படுத்தவோ அல்லது அடிப்படை வசதிகளைக் கொண்ட ஒரு வீட்டை அமைப்பதற்கோ போதாது. நிறுவனங்கள் தமக்கான வீடுகளைச் கட்டித்தரும் என்பதில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை இழக்கப்பட்டு வருகின்றது. உலக வங்கியின் நிதியுதவியுடன் நிறுவனங்களின் பங்களிப்பையும் பெற்று இணைந்த நிதி ஒப்பந்தம் ஊடாக மக்கள் வீடுகளை அமைக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. அந்த முயற்சிக்கும் பல நிறுவனங்கள் ஒத்துவரவில்லை. அதனால் மக்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து மக்கள் இடைத்தங்கல் முகாம்களில் வாழும்போது பல்வேறுபட்ட சமூக பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். கஷ்டமான, துன்பகரமான வாழ்வையே வாழ்ந்து வரும் அவர்கள் விரைவாக நிரந்தர வசிப்பிடங்களில் வாழ்வதற்குரிய வழிவகைகள் கிடைக்காதா என அங்கலாய்த்து நிற்கின்றனர். அவல வாழ்வு வாழும் அம்மக்களுக்குரிய உதவிகளை உரிய வேளைகளில் உரியமுறையில் கிடைக்கச் செய்வது மனித நேயம் கொண்ட அனைவரிதும் பொறுப்பாகும். (08,20)



முழங்காவில் வலைப்பாடு பிரதேச புனித அன்னமாள் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் வடக்கு கிழக்கு முன்பள்ளி ஒருங்கிணைப்பாளர் கணேசலிங்கம் முதலாவது கல்லினை நாட்டி வைத்தார். (படம்:- குகன்)

# வீதியில் வீழ்ந்த மரம் ஒருவாரமாக அகற்றப்படாத நிலையில்



படம்: தவரட்ணம்

கடந்த மாதம் 21ஆம் திகதி பெய்த கனமழையின் போது புதுக்குடியிருப்பு மாத்தளன் வீதியில் புதுக்குடியிருப்பு இந்து மயானத்துக்கு அருகில் வீதியில் வீழ்ந்த மரம் இதுவரையும் அகற்றப்படாதுள்ளது. இதனால் வீதி விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகின்றனர். (08)

*சுனாமி அனர்த்தத்திற்கு இரு பிள்ளைகளையும்*

# பறிகொடுத்த தாய் நினைவுநாளில் குழந்தையொன்றை பெற்றெடுத்தார்

சுனாமி அனர்த்தத்தின் போது எழுந்த பேரலைக்கு தனது இரண்டு குழந்தைகளையும் இழந்த வெற்றிலைக்கேணி முள்ளியானைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு நேற்று முன்தினம் பெண்குழந்தை பிறந்துள்ளது.

வெற்றிலைக்கேணி முள்ளியானைச்சேர்ந்த குவேந்திரராணி (வயது 28) என்பவர் தனது ஆறு வயதுப் பெண்குழந்தையையும் மூன்றுமாதம் நிரம்பிய ஆண்குழந்தையையும் சுனாமி பேரலைக்குப் பறிகொடுத்திருந்தார்.

இந்த நிலையில் சுனாமி அலைகள் தாக்கிய ஓராண்டு நினைவுதினமான நேற்று முன்தினம் பகல் 11.40 மணியளவில் கிளிநொச்சி மருத்துவ மனையில் பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்துள்ளார்.

# விலங்கறுமனை தவிர்ந்த இடங்களில் விலங்குகள் வெட்டுவதைத் தவிர்க்கவும்

## தமிழீழ சுகாதார சேவை அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

அனுமதிக்கப்பட்ட விலங்கறுமனைகள் தவிர்ந்த பிற இடங்களில் இறைச்சிக்காக விலங்குகள் வெட்டுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் அறிவித்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிவிப்பில் எமது தாயகப்பகுதியில் அனுமதிக்கப்பட்ட விலங்கறுமனைகள் (கொல்களங்கள்) தவிர்ந்த பிற இடங்களில் இறைச்சித்தேவைக்காக விலங்குகள் வெட்டப்படுவதை அவதானிக்க முடிகிறது. விலங்கறுமனைகள் தவிர்ந்த பிற இடங்களில் விலங்குகள் தொற்று ஏற்பட்ட நிலையில் வெட்டப்பட்டு மனித உணவுத் தேவைக்கு வழங்குவதால் பல்வேறுவகையான தொற்று நோய்கள் பரவும் சாத்தியம் அதிகரித்துள்ளமையை அவதானிக்க முடிந்தது.

மேற்படி நிலையை கருத்திற்கொண்டு விலங்கறுமனைகள் தவிர்ந்த பிற இடங்களில் விலங்குகள் (ஆடு,மாடு) வெட்டுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அவசிய தேவையின் போது வெட்டப்படும் சந்தர்ப்பங்களில் அனுமதி பெற்றே மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு.தீ)

# தாவரவலய அமைப்பின் மூலம் கரையோர சூழலைப் பாதுகாத்தல் பயிற்சிப் பட்டறை


(அலுவலக செய்தியாளர்)

தாவரவலய அமைப்பின் மூலம் கரையோரச் சூழலைப் பாதுகாத்தல், எஸ்.ஏ.எம். நிறுவனத்தின் அனுசரணையுடன் பொருண்மிய மதியுரையகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பரீட்சார்த்த திட்டமான வீட்டுத் தோட்டம் தாளையடி, மருதங்கேணி, சோரன்பற்று, தர்மங்கேணி ஆகிய இடங்களில் வெற்றியளித்தமையினை அடுத்து அண்மையில் தாவர வலய அமைப்பு என்னும் பயிற்சிப் பட்டறை பொருண்மிய மதியுரையக கேட்போர் கூடத்தில் திட்ட இணைப்பாளர் மனோகரன் தலைமையில் நடத்தப்பட்டது.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட கரையோர மீள் குடியேற்றத்தினை அண்மித்துள்ள பகுதிகளில் இயற்கையினைப் பேணுவது, தாவர இனப் பல்வமையினை அதாவது சூழல் தொகுதியில் தாவரங்கள், விலங்குகள் என்பன ஒரே சமநிலையில் பேணப்படுவதனைக் கருத்தில் கொண்டும் வெவ்வேறு தாவர வர்க்கங்களினை உருவாக்கு வதன் மூலம் ஒரு நகரத்தினை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ இயற்கை அனர்த்தத்திலிருந்து பாதுகாக்கலாம்.என்பன அப்பயிற்சிப் பட்டறையின் கருப்பொருளாக இருந்தது.

தொடர்ந்து சொலிடார் திட்ட அலுவலர் மீள் குடியேற்றங்களில் இயற்கைத் தாவரங்களை நடுவதன் மூலம் எவ்வாறு தாவர வலய அமைப்பை உருவாக்கலாம் எனவும் பூமி அமைப்பு இதில் எவ்வாறு பங்களிப்பைச் செய்கின்றது என்பது பற்றியும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த மிகிந்தன் கருத்துத் தெரிவிக்கையில், கரையோரப் பகுதிகளில் வனவளத்தை கட்டுமானத்திற்கு கொண்டு வருவதன் மூலம் கரையோரப் பிரதேசத்தில் வரும் தாக்கத்தைக் குறைத்து எவ்வகையான மரங்களை நடலாம் என்பதனை கரையோரத்தில் குடியமர்ந்துள்ள மக்களைக் கொண்டு ஆய்வு செய்வதன் மூலம் அறியலாம் எனத் தெரிவித்தார். யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நந்தகுமார் தாவரப் பகுப்பாய்வின் அடிப்படையில் கரையோரத்திலிருந்து மக்கள் வாழும் குடியேற்றத்திட்டம்வரை நாட்டக் கூடிய தாவரங்கள் பற்றிக் கூறினார். தொடர்ந்து தாவர வலய அமைப்பில் நாட்டப்படும் தாவரங்களில் பொருளாதார, மருத்துவ முக்கியத்துவங்கள் பற்றி வனவளமாக்கல் பிரிவைச் சேர்ந்த செல்வரத்தினம் விளக்கினார். (தீ கு)



பெரிய பரந்தனில் நடைபெற்ற சமுதாய அபிவிருத்தித் திட்ட அறிமுகவிழாவில் திட்ட விளக்கவுரையினை தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்ட இணைப்பாளர் சுதர்சன் வழங்குவதைப் படத்தில் காணலாம் இந்நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. (படம்:-குகன்)

# இந்திய அரசிற்கு எதிரான சக்திகளைக் கொண்டுவர சிறிலங்கா முற்படுவதைப் புரிந்து கொள்ள வேண்டும்!

## விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே பாலகுமாரன் வேண்டுகோள்



**இந்திய அரசுக்கு எதிராக யப்பான், சீனா போன்ற சக்திகளைக் கொண்டு வருவதில் சிறிலங்கா அரசாங்கமும் சிங்கள சக்திகளும் செயற்பட்டு வருவதை இந்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

புலிகளின் குரல் வானொலியில் கடந்த சனிக்கிழமைஒலிபரப்பாகிய அரசியல் அரங்கம்நிகழ்வில் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வேபாலகுமாரன் கருத்துக் கூறுகையில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

கொழும்பு அரசியலைப் பார்க்கும்போது தெளிவாகத்தெரியும் சிங்களத்தலைவராகத் தோற்றமளிக்கும் மகிந்தர் இப்பொழுது வழமை போன்ற மிகத்தந்திரமான, ஒரு குள்ளநரியாக, ஒரு சந்திரிகாவாக, ஒரு பிரேமதாசாவாக மாறக் கூடிய நிலைக்கு வந்து விட்டார்.

அவருடையஅரசியல் நடவடிக்கைகள் வழமையான நரித்தந்திரம் நிரம்பிய அரசியல் தன்மைகள் கொண்டிருப்பதை நாம் தெளிவாகப்பார்க்கின்றோம். அதனை இந்தப்பேச்சுவார்த்தையின் அறிவிப்பில் பார்க்கலாம்.

பேச்சுவார்த்தை என்றாலே இரண்டு தரப்பும் ஒருமித்து சந்திக்க வேண்டிய இடம். அந்த இடமே பிரச்சினையாக்கப்படும்போது அந்தப்பேச்சுவார்த்தை என்பது எத்தகைய வேறு நோக்கங்களைக்கொண்டது என்பது மிகத்தெளிவாகத்தெரிகிறது.

ஆகவே சிங்கள அரசியல் தொடர்பாக இனி நாம் பெரிதாகப் பேசுவதற்கோ அல்லது மகிந்தரின் செயற்பாட்டுக்கு ஊடாக அமைதியான ஒரு வரய்ப்பு அல்லது கதவு திறக்கப்படும் என்பதற்கான அனைத்து வாய்ப்புக்களையும் அவரே அடைத்து விட்டார்.

கதவைத்திறந்து, அவரே கதவை சாத்தி, பூட்டைப்பூட்டி திறப்பை எடுத்துக்கொண்டு அவர் இந்தியாவுக்குப்போகிறார்.

இந்தியா என்கிற சொல் தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் முக்கிய பதிவாக இருக்கிறது. எங்கள் மக்கள் மத்தியில் இந்தியா தொடர்பாக ஒரு நெகிழ்வு, ஒரு அன்பு,ஒரு அச்சம், மிகைப்படுத்தப்பட்ட பயம், சில முற்கற்பிதங்கள் என்ற எண்ணங்கள் பலவாறாக இருக்கின்றன.

நாங்கள் எங்கே எவரைச்சந்தித்தாலும் இந்தியா தொடர்பான கேள்விகளைக்கேட்காமல் விடுவது கிடையாது.ஏதோ இந்தியா எங்களுக்கு பரம எதிரி போலவும் எங்களது விடுதலைப் போராட்டத்துக்கு இந்தியா தடையாக இருப்பது போலவும் இந்தத்தடையை எவ்வாறு மீறுவது என்று நாங்கள் சிந்திப்பது போலவும் இது தொடர்பாக பல்துறைசார்ந்த அறிஞர்களும் இந்தியாவோடு உறவை ஏற்படுத்தி இந்தியாவுக்கு நிலைமைகளை விளங்கப்படுத்தி இந்தியாவுடன் நாங்கள் கீழிறங்கி உறவைப்பேணா விட்டால் என்ன செய்வது என்று தலையில் கை வைத்து வியக்கிற துன்பகர நிலையையும் நாங்கள் பார்த்து வருகிறோம்.

இது தொடர்பாக தேசியத் தலைவருடன் நாங்கள் நீண்டகாலமாக பேசியும் வருகின்றோம். அவரும் இது தொடர்பாக பல கருத்துக்களையும் சொல்லி இருக்கிறார்.

இந்தியா என்று சொல்லுகிறபோது நாங்கள் இந்திய மக்களைத்தான் நம்புகிறோம் குறிப்பாகத் தமிழ் நாட்டு மக்களை நம்புகிறோம்

தமிழ் நாட்டு மக்கள் தற்போது உள்ள சூழ்நிலையில் பல்வேறு அடக்குமுறை ஒடுக்குமுறைச் சட்டங்களின் வெளிப்பாடு காரணமாக தங்களுடைய ஆர்வத்தை அந்த ஈடுபாட்டை .மறைத்து மனதுக்குள்ளே வைத்திருக்கிறார்கள். இவை நீங்கும் போது அவை வெளிவரும் என்று சொன்னார்கள்.அது முதலிலே சொன்ன கருத்து.

அதுபோலவே இப்போது பொடா சட்டம் எடுத்ததற்குப் பின்னாலே தமிழ்நாட்டில் உணர்வலைகள் மெல்ல மெல்ல பொங்கி மேலே வருவதையும் எங்களுடைய செய்திகள் தமிழ்நாட்டிலே முக்கிய இடத்தைப் பெறுவதையும் அண்மையிலே கூட புங்குடுதீவு பாலியல் வல்லுறவுச் சம்பவம் தமிழ்நாட்டிலே மிகப் பெரிய செய்தியாக சென்றதையும் தமிழருடைய உரிமையை சிங்களவன் மறுப்பதைத் தெளிவாகச் சொல்லக்கூடிய கட்டுரைகளும் முக்கியமான பத்திரிகைகளில் அங்கு வருவதை நாம் அறிகிறோம்.

அவ்வாறு பார்க்கும் போது எங்களுக்குப் பழைய ஞாபகங்கள் எல்லாம் வருகின்றன. அதை ஒரு புறம் தள்ளி வைத்துவிட்டு இந்தியா தொடர்பான சில கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன்.

அண்மைக்கால நிகழ்ச்சிகளுக்கு ஊடாக இந்தியாவின் போக்கில் எவ்வாறு மாற்றம் பெறுகிறது என்று பாருங்கள்.

இந்தியா என்று நாம் சொல்லும்போது, இந்திய அரசு என்று பார்க்கின்றபோது சில நலன்கள் இருக்கின்றன. அந்த நலன்களை அடைவதற்காக காலம்காலமாக தன்னுடைய கொள்கைகளை மாற்றிக் கொண்டும் சிலவற்றை வேறு பாதைக்கு திருப்பிக் கொண்டு போவதையும் பார்க்கலாம். உதாரணத்துக்கு,

ரணிலுடைய சமாதான முயற்சிகள் நடைபெற்ற காலத்தில் இந்தியா ஒருவகையான அமைதி நிலைப்பாட்டை எடுத்தது. அதேவேளையில் சந்திரிகா போன்ற தலைவர்களையும் ஜே.வி.பி போன்றகட்சி களையும் பயன்படுத்தி இந்த அமைதி முயற்சிகளுக்கு இந்தியா ஒரு தடையாக இருந்தது என்ற அவச்சொல்லும் அந்த காலகட்டத்திலே பல்வேறு தரப்புகளால் கருத்துகள் சொல்லப்பட்டது.

இப்போது பார்க்கலாம் இந்த முறை மகிந்தர் பதவியை எடுத்த போது இந்தியாவை துணைக்கு அழைத்தார். எதற்கெடுத்தாலும் இந்தியாவை துணைக்கு அழைக்கின்ற போது இந்தியாவுக்கு ஒரு அச்சம் தோன்றியிருக்க வாய்ப்பு இருக்கிறது. இந்த மகிந்தர் போன்ற தலைவர்கள் தங்களுடைய தவறான செயற்பாடுகளுக்கு இந்தியாவை துணைக்கு அழைப்பது எவ்வளவு சரி என்ற கேள்வி இந்திய கொள்கை வகுப்பாளர்களிடம் நிச்சயமாக எழுந்திருக்க வேண்டும்.

மகிந்தர் நிச்சயமாக நம்பினாராம் இந்தியா தன்னோடு நல்லுறவைப் பேணும் என்று. அந்த நம்பிக்கையில் தான் அவர் நோர்வேயை எடுத்தெறிந்தும். புலிகளைச் சீண்டியும் பலவாறாகப் பேசிக் கொண்டு வந்தார்.

ஆனால் மங்கள சமரவீர இந்தியா சென்ற போது இந்தியா மிகத் தெளிவாகச் சொன்னதாக செய்திகள் வெளிவந்தன. வடக்கு- கிழக்கு இணைப்பு தொடர்பான இந்திய நிலைப்பாடு உங்களுக்குத் தெரியும். இந்தியாதான் முதன்முறையாக வடக்கு-கிழக்கு நிலைப்பாடு தொடர்பாக சட்ட ரீதியான ஒரு கருத்தை முன்வைத்து இந்திய- இலங்கை ஒப்பந்தத்திலே சொல்லப்படுகிற நிலைக்குத் தள்ளப்பட்டது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

நாங்கள் தனிப்பட்ட முறையிலே ராஜீவ் காந்தியைச் சந்தித்தபோது கூட அவர் சொன்ன கருத்து, வடக்கு- கிழக்கு இணைப்பை நாங்கள் ஒரு போதும் பிரிக்கவிடமாட்டோம். நீங்கள் அதுபற்றி கவலைப்பட வேண்டாம் என்று எங்களுக்கு வாக்குறுதி தந்திருந்தார். இவையெல்லாம் வரலாற்றிலே பதிவுகளாக நாங்கள் சொல்லக் கூடிய வாய்ப்பு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே அந்த வகையிலும் இன்னொரு வகையிலே பார்த்தால் போர் நிறுத்த உடன்பாட்டை மாற்றுவது அல்லது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை மாற்றுவது போன்ற விடயங்களிலும் இந்தியா ஆர்வமாக இருக்கவில்லை. இந்தியா சொன்ன செய்தி மிகத் தெளிவானது. இதே பாதையில் தொடர்ந்து சென்று ஒரு இணக்கப்பாட்டிற்கு வர முயலுங்கள் என்று இந்தியா திருப்பி அனுப்பிய கதையை நாங்கள் அறிவோம்.

ஜே.வி.பி போன்ற சக்திகள் இந்தியாவை பயன்படுத்தி தங்களுடைய இலக்கை அடைவதற்காக முயற்சிப்பது குறித்து இந்தியாவுக்கு அச்சம் தோன்றியிருப்பது எங்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது.

அதன் விளைவாகத்தான் ஜே.வி.பி போன்ற சக்திகள் யப்பான் அல்லது சீனாவை முன் நிறுத்தும் போது அது இந்தியாவுக்கு உவப்பாக இருக்க முடியாது.

இந்த விடயங்களில் இந்தியா பெரிதும் தலையிடுவதாகத் தெரியவில்லை

ஆகவே மகிந்தர் யப்பானை தரப்பாக எடுத்த போது நாங்கள் அதை மறுத்த பொழுது இந்தியாவுக்கு அதிலே ஒரு செய்தி இருப்பதை இந்தியா உணர்ந்திருக்கக் கூடும்.

நாங்கள் இந்த விடயங்களில் தெளிவாக இருக்கிறோம். எங்களுக்கு இந்தியாவுடன் எந்தப் பகைமையும் கிடையாது. இந்தியாவுக்கு ஒரு சிறு பகைமையுள்ள ஒரு போட்டியாக வரக்கூடிய சீனா, யப்பான் போன்ற நாடுகளை நாங்களும் முன்நிறுத்தி செயற்படவில்லை.

எங்களுடைய நோக்கம் எப்போதும் இந்தியாவைப் பகைப்பது கிடையாது. இந்தியாவின் நலன்களுக்கு எதிராக நாங்கள் செயற்படப்போவதும் கிடையாது. அதேவேளையில் எங்களுடைய நலன்களுக்கு எதிராக இந்தியாவும் செயற்படக்கூடாது இதுதான் தலைவரின் முக்கியமான எண்ணம். இதை நாங்கள் தெளிவாகச் சொல்லி இருக்கிறோம்.

இந்தியத் தரப்பு எங்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ள மறுப்பது எங்களுக்குப் பெருத்த வேதனையாக இருக்கிறது.

இன்று நிலைமைகள் மாறி இருக்கின்றன. இந்தியத் தரப்பு அண்மைக்காலமாக தங்களுடைய நிலைப்பாட்டை மறு ஆய்வு செய்யக் கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதை நாங்கள் தெளிவாக அறியக் கூடியதாக இருக்[illegible]து.

[illegible]ள்ள ஒரு முக்கியமான செய்தி [illegible]னில் இந்தியாவுக்கு மாற்றான ஒரு சக்தியைக் கொண்டுவர புலிகள் விரும்பவில்லை என்பதும், அந்த மாற்று சக்தியைக் கொண்டுவருவதற்கு இந்தியாவுடன் கூட நின்ற சக்திகள்தான் முயலுகின்றன என்பதை நாங்கள் இங்கே சுட்டிக்காட்ட வேண்டிய தேவை இருக்கிறது. அதை இந்தியா புரிந்தும் இருக்கிறது.

இதற்கு அப்பால் எங்கள் மக்களிடம் பேசும் போது, நாங்கள் சொல்லக்கூடிய செய்தி என்னவெனில் இந்தியா தொடர்பான அச்சம் எங்கள் மக்களிடத்திலே இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதுதான் எங்களுடைய பிரதான நிலைப்பாடு

இந்தியா தொடர்பான முற்கற்பிதங்களை நாங்கள் மாற்றிக் கொள்வோம். ஏனென்று சொன்னால் எங்களுடைய விடுதலைப் போராட்டம் இன்று ஒரு உன்னதமான நிலையை அடைந்து அதனுடைய இறுதிப் பக்கங்களைத் தயாரிக்கிறஇந்த வேளையிலே நாங்கள் அச்சம் ஐயுறவு எதுவுமற்று ஒரு தெளிவான மக்களாக மாறவேண்டும் என்பதற்காக இந்த நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று நாங்கள் தாழ்மையாக வேண்டிக் கொள்கிறோம்.

---

# சோதனை என்ற பெயரில் பெண்களுடன் யாழ். இல் அங்க சேஷ்டை புரியும் படையினர்

## - மகளிர் அமைப்புக்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் வீதிச் சோதனைகளில் ஈடுபடும் படையினர் சோதனை என்ற பெயரில் பெண்களிடம் அங்கசேஷ்டைகளில் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெண்களை நீண்ட நேரம் வீதிகளில் தடுத்து வைக்கும் படையினர் அவர்களின் கைப்பைகள் மற்றும் உடமைகளை சோதனையிடுவதுடன் பெண்களிடம் ஆபாசமாக உரையாடுவதாகவும் இதனால். பெண்கள் மன உளைச்சலுக்கும் சங்கடங்களுக்கும் ஆளாவதாகவும் தெரிய வருகிறது.

படையினரின் இச்செயற்பாடுகள் குறித்து மகளிர் அமைப்புக்கள் தமது கண்டனத்தைத்தெரிவித்துள்ளன. (28)

# "நெருப்பு நினைவுகள்" இறுவட்டு வெளியீடு

ஆழிப்பேரலை பேரழிவை வெளிப்படுத்தும் வகையிலான பாடல்கள் அடங்கிய 'நெருப்பு நினைவுகள்' இறுவட்டு வெளியீடு நல்லூர் திவ்விய ஜீவன மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் எஸ். ரி. ரமணன் தலைமை வகித்தார். கோப்பாய் தேசியக் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ. ரவீந்திரன் இறுவட்டின் ஆய்வுரையை நிகழ்த்தினார். அரியாலையைச் சேர்ந்த எம்.வி.கேதுமணாவின் ஆக்கத்தில் உருவாக்கப்பட்ட பாடல்களைக் கொண்ட இத்தொகுப்பிற்கு ராகம்ஸ் இசைக் குழுவின் இயக்குநர் ரி.எ. சந்திரன் குழுவினர் இசையமைத்துள்ளனர். ஆறுதிருமுருகன் இறுவட்டினை வெளியிட முதல் பிரதியை லயன் சொக்கலிங்கம் பெற்றுக்கொண்டார். (41)

# வீதியால் வரும் பொதுமக்களைக் கொண்டு காவலரண் அமைக்கும் படையினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினர் பொதுமக்களை மிரட்டித் தமது காவலரண்களைப் பலப்படுத்தியும், புதுப்பித்தும் வருகின்றனர்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் முத்திரைச்சந்தி, அரசடிச் சந்தி, கச்சேரியடிச் சந்தி ஆகிய இடங்களில் சிறிலங்காப் படையினர் பொதுமக்களைப் பயன்படுத்தி தமது காவலரண்களைப் பலப்படுத்தியதைக் காண முடிந்தது.

படையினர் பொதுமக்களுடைய வாகனம் ஒன்றில் மண் மூட்டைகள், ரயர்கள் என்பனவற்றை ஏற்றிக்கொண்டு வீதியால் வரும் பொதுமக்களை மிரட்டி பலாத்காரமாக தமது காவலரண்களைப் பலப்படுத்தி வருகின்றனர்.

படையினர் கச்சேரி சந்தியில் புதிதாக காவலரண் அமைத்து வருகின்றனர்.

ஏற்கனவே, அந்த இடத்தில் இருந்த காவலரண் சிறிது காலத்திற்கு முன்னர் அவ்விடத்தைவிட்டு அகற்றப்பட்டு தற்பொழுது மீண்டும் காவலரண் அமைக்கப்பட்டுள்ளது. (கீ)

சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகள், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களுடனான சந்திப்பின் போது, யுத்த நிறுத்தம் எதிர்நோக்கும் நெருக்கடி நிலை பற்றி மட்டும் பேசினரா? அன்றி விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு உடன் திரும்ப வேண்டும் என வலியுறுத்தினரா? என்பது குறித்து அரசியல் வட்டாரங்களில் கேள்வியும், சந்தேகங்களும் உண்டு.

பொதுவில், அண்மையில் பிரசெல்சில் நடைபெற்ற இணைத் தலைமை நாடுகளின் சந்திப்பின்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை விடுதலைப்புலிகளுக்குத் தெரியப்படுத்தியதாகவும், யுத்த நிறுத்த உடன்பாடு எதிர்நோக்கும் நெருக்கடி பற்றியும் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு திரும்ப வேண்டிய அவசியம் பற்றியும் விவாதித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதாவது, பேச்சுவார்த்தைக்கு உடன் திரும்பவேண்டும் என்ற வற்புறுத்தல்கள் விடுக்கப்பட்டதாக இல்லை என்றே அறிய வருகின்றது. ஆனால், இணைத்தலைமை நாடுகள் விடுதலைப்புலிகள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க முனைந்தால்கூட விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை தொடர்பாக தமது நிலைப்பாட்டை தெளிவாக முன்வைத்துள்ளனர். இதன்போது சரியானதும், நிராகரிக்க முடியாததுமான விளக்கத்தினை கொடுத்துள்ளனர் எனின் மிகையாகாது.

விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையிலான மோதல் ஆரம்பிப்பதற்கும், அம்மோதல்கள் சமரசம் செய்ய முடியாமல் போனமைக்கும் காரணமாக இருந்தன என்பதும் சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

இவ் ஆயுதக் குழுக்கள் இரண்டு வகையில் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு ஊறுவிளைவிக்கத்தக்கன.

01. தமது தனிப்பட்ட முடிவுகள் அடிப்படையில் யுத்த நிறுத்தத்தைப் பாதிக்கும் வகையில் செயற்படுதல்.

02. சிறிலங்கா அரசின், புலனாய்வுத்துறையின் கைக்கூலிகளாக யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு எதிராகச் செயற்படுதல்.

இவ்விரண்டு வழிமுறைகளிலும் இவ் ஆயுதக் குழுக்கள் செயற்பட்டுள்ளன என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. இதேவேளை, இவ் ஆயுதக்குழுக்களின் பெயரில் சிறிலங்கா புலனாய்வுத்துறையும் தமது செயற்பாட்டை மேற்கொள்வதுண்டு. இச்செயற்பாட்டில் சில வேளைகளில் இவ் ஆயுதக் குழுவினர் சேர்த்துக்கொள்ளப்படுவதும் உண்டு. சில வேளைகளில் புறந்தள்ளப்படுவதும் உண்டு.

ஒப்பந்தத்தின் பிரகாரம் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டுவிட்டதாக அரசாங்கம் கூறிக்கொண்டாலும் அவ் ஆயுதக்குழுக்கள் தமிழர் தாயகப் பகுதியில் நிலைகொண்டுள்ளன என்பதற்கும் அவை

ளது. அதாவது, யுத்த நிறுத்த உடன்பாடு மேம்பட்டதானதொன்றாகவே உள்ளது. சிறிலங்கா ஆட்சியாளர்களே இதனை அமுல் செய்ய முன்வருதல் வேண்டும்.

ஆகையினால், சிறிலங்கா ஆட்சியாளர் கூறுவது போன்று யுத்த நிறுத்த உடன்பாட்டுத் திருத்தம் என்பது தேவையானதுமல்ல. சாத்தியப்படானதும் அல்ல. இதனை இணைத் தலைமை நாடுகளின் இராஜதந்திரிகளும் புரிந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன.

அடுத்ததாக, நோர்வேயிலேயே அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை என்பது. அதாவது, ஏற்பட்டாளர் பாத்திரம் வகிக்கும் நோர்வேயில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில் சிறிலங்கா அரசு தயக்கம் காட்ட வேண்டியது ஏன்? நோர்வே புலிகளுக்குச் சார்பாக நடந்து கொள்கின்றது என்றால் எவ்வாறு நோர்வே ஏற்பாட்டில் பேச்சு நடத்த முடியும்? நோர்வேயை முற்றிலுமல்லவா வெளியேற்ற வேண்டும்?

நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர் பாத்திரத்தினை விடுதலைப்புலிகள் மட்டுமல்ல, இன்று சர்வதேச நாடுகள் அனைத்துமே ஏற்றுக் கொள்கின்றன. குறிப்பாக, மேற்குலகமும், சமாதானப் பேச்சுவார்த்தையை தமது நாட்டில் நடத்தவும் தயாராகவுள்ள யப்பான், சமாதான ஏற்பாட்டாளராக பாத்திரம் வகிக்க சிறிலங்கா அழைத்த இந்தியாவும்கூட நோர்வேயின் முயற்சிக்கு ஆதரவு அளிக்கின்றன.

உலகிலுள்ள எந்த நாடும் நோர்வேக்கு

யுறவுக்கொள்கையைத் திருப்புவதாக இருப்பினும் கிழக்கு ஆசிய, தெற்காசிய நாடுகள் இலங்கையின் உறவில் காத்திரமான முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதே யதார்த்தமானதாகும்.

இந்நிலையில், ஆசியா நோக்கியதான வெளியுறவுக் கொள்கை என்பது புதியதொன்றும் இல்லை. ஆசிய நாடுகளில் பேச்சுவார்த்தை நடத்துவதென்பது - தமக்கு ஆதரவானதொரு நாட்டில் பேச்சுவார்த்தை நடத்துவதென்பதை இலக்காகக்கொண்டதொன்றாகும்.

அத்தோடு, இக்கோரிக்கைக்கு ஆசிய நாடுகளில் இனப்பிரச்சினைத் தீர்விற்கான முன்னுதாரணம் எதுவும் இல்லாமையும், சமஷ்டி முறையிலான ஆட்சி முறை வளர்ச்சியும் காணாமையும் காரணம் ஆகும். அதாவது, அரைவேக்கடான சமஷ்டி முறைகளைக் கொண்ட நாடுகளை முன்னுதாரணமாகக் கொண்டு பேச்சு நடத்த முற்படும் முயற்சியாகும்.

இந்த நிலையில், விடுதலைப்புலிகள் இயக்கம் முதற்கட்டப்பேச்சுவார்த்தைகளை சமாதான ஏற்பாட்டாளராகச் செயற்படும் நோர்வேயில் நடத்துவதற்கு முற்பட்டு நிற்பதை எவருமே புலிகளின் ஒரு நிபந்தனையாகவோ, வற்புறுத்தலாகவோ கொள்ள முடியாது. சமாதான முயற்சியில் முன்னேற்றங்களைக்காண சிறந்ததொரு வழிமுறையாகவே கொள்ள முடியும்.

# புலிகளின் நிலைப்பாட்டுடன் முரண்பட எதுவுமில்லை!

யுத்த நிறுத்த உடன்பாடு, சமாதானப் பேச்சுவார்த்தை ஆகிய இரண்டும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளன. இதில், யுத்த நிறுத்த உடன்பாட்டிற்குப் போடப்படும் முட்டுக்கட்டை, பலவீனப்படுத்தும் முயற்சிகள் என்பன சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இடையூறு விளைவிக்கும் ஒன்றாகவே நிச்சயம் இருக்கும். இந்த வகையில் இன்று சிறிலங்கா அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்பாட்டை அமுலாக்கம் செய்யாது இழுத்தடிப்புச் செய்யும் நிலையே இன்றைய அனைத்து நெருக்கடிக்கும் காரணமாகும்.

இணைத் தலைமை நாடுகளிடம் இதனைத் தெளிவாக முன்வைத்துள்ள விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்த உடன்பாட்டை அமுல் செய்வதில் சிறிலங்கா அரசாங்கம் காட்டும் அசிரத்தையே இன்றைய நெருக்கடி நிலைக்குக் காரணம் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விடுதலைப்புலிகளும் - சிறிலங்கா அரசாங்கமும் செய்து கொண்டுள்ள யுத்த நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கத்திற்கான உச்சகட்ட கால அளவு 180 நாட்களாகும். ஆனால், இன்று உடன்பாடு கைச்சாத்தாகி நான்கு வருடங்கள் ஆவதற்கு இன்னும் இரண்டு மாதங்களுக்குக் குறைவாகவுள்ள நிலையிலும்கூட உடன்பாட்டின் பல பகுதிகள் நிறைவேற்றப்பட்டதாக இல்லை.

அதிலும் குறிப்பாக, உடன்பாட்டு விதி 1.8, 1.13 போன்ற விதிகள் முற்றாக மீறப்பட்டவையாக, அமுல் செய்யப்படாதவையாகவுள்ளன. இதேவேளை, இவ்விரண்டு சரத்துக்களும் நிறைவேற்றப்படாமை யுத்த நிறுத்த உடன்பாட்டின் அனைத்துச் சரத்துக்களையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளதெனலாம்.

யுத்த நிறுத்த உடன்பாட்டில் இராணுவத் துணைக்குழுக்கள் பாரிய அளவிலான பாதிப்பை விளைவிக்கக்கூடும் என்ற எதிர்பார்க்கை ஆரம்பத்தில் உணரப்பட்டிருந்ததன் விளைவே இத்துணைப் படைக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும். அவை வடக்கு-கிழக்கிற்கு வெளியில் கொண்டு செல்லப்படுதல் வேண்டும் என்றவிதி உள்ளடக்கப்பட்டது.

எடுத்துக்காட்டாக, இந்திய இராணுவத்துடன் சேர்ந்தியங்கிய துணைப்படைக்குழுக்கள் கடந்த காலத்தில் சமாதான முயற்சிகளுக்குப் பெரும் இடையூறு விளைவித்தன என்பது கடந்த கால அனுபவமாகும். இந்திய இராணுவம் வடக்கு-கிழக்கில் நிலை கொண்டிருந்தபோது இத்துணைப்படைக்குழுக்களின் நடவடிக்கைகள்

சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப் பாட்டுப் பகுதியில் செயற்படுகின்றன என்பதற் கும் போதிய ஆதாரங்கள் உள்ளன. சர்வதேச சமூகத்திற்கும் அது வெளிப்படையாகத் தெரிந்ததொன்று.

ஆனால், சிறிலங்கா ஆட்சியாளர்களோ இதனை மறுக்கின்றனர். துணைப்படை எதுவும் சிறிலங்கா இராணுவத்தில் இல்லை எனவும், ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டுவிட்டன எனவும் கூறுகின்றனர். அது மட்டுமல்லாது தற்பொழுது ஒரு புதிய விளக்கமாக கருணா குழு விவகாரம் விடுதலைப்புலிகளுடன் சம்பந்தப்பட்டது. அதனை விடுதலைப் புலிகளே தீர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் கூறுகின்றனர்.

இப்புதிய விளக்கம் ஒருவகையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதே. ஆனால், ஒன்று கருணா குழு விடுதலைப்புலிகளின் ஓர் அணி எனின், அதனை எவ்வாறு அரச இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் ஆயுதங்களுடன் அனுமதிக்க முடியும்? அவர்களைத்தேடி தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் பிரவேசித்தால் சிறிலங்கா இராணுவம் இது ஒரு யுத்த நிறுத்த மீறல் எனக் கூக்குரல் இடமாட்டாதா?

யுத்த நிறுத்த உடன்பாட்டில் முற்றிலுமாக அமுல் செய்யப்படாத சரத்துக்கள் ஒருபுறமிருக்க, நடைமுறைக்கு வந்த சரத்துக்களில் சில பின்னர் கைவிடப்பட்டமையும் நிலைமையை மோசமடையச்செய்துள்ளது. குறிப்பாக, அரசியல்துறைப் போராளிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வெளியேறியமை, வடக்கு-கிழக்கிற்கான போராளிகளின் போக்குவரத்திற்கு பாதுகாப்பு வழங்கப்படைத்தரப்பு மறுத்தமை என்பனவற்றைச் சுட்டிக்காட்ட முடியும். இவை இரண்டும் சிறிலங்கா அரசின் ஒத்துழைப்பு இன்மையால் கைவிடப்பட்டவையாகும்.

அதாவது, சிறிலங்கா படைத் தரப்பு உரிய பாதுகாப்பு வழங்கத் தவறியமை காரணமாக கைவிடப்பட்டவையாகும். இவ்விரண்டு விடயங்கள் தொடர்பாக புலிகள் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருந்தபோதும் அரசாங்கம் இவ்விடயத்தில் அக்கறை காட்டியதாக இல்லை.

இந்த நிலையில், விடுதலைப்புலிகள் அமைப்பு யுத்த நிறுத்தம் தொடர்பாக தமது நிலைப்பாட்டைத் தெளிவாகவே முன்வைத்துள்

மாறாக, சமாதான பேச்சுக்களை தமது நாட்டில் நடத்த வேண்டும் எனக் கோரவில்லை. நோர்வே அரசு பேச்சுவார்த்தையை எங்கு நடத்துவதற்கும் தயாராக இருப்பினும், பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு நோர்வேயைத் தவிர பொருத்தமான நாடு எதுவும் இல்லை.

ஆனால், விடுதலைப்புலிகள் நோர்வேயில் மட்டும் தான் பேச்சுக்களை நடத்த வேண்டும் எனக் கோரவில்லை. முதல் சுற்று ஆரம்பப் பேச்சுக்களை நோர்வேயில் நடத்த வேண்டும் எனக் கோருகின்றனர் என்பதே சரியானதாகும்.



சிறிலங்கா அரசுத் தலைமை ஆசிய நாடு ஒன்றில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தமது வெளியுறவுக் கொள்கையில் ஆசிய நாடுகளுக்கு முதன்மை அளிக்கப்போவதாகக் கூறிக் கொள்வதைக் காரணமாகக்கூற முற்படுகின்றது.

ஆனால், ஆசிய நாடுகளைச் சார்ந்ததான வெளியுறவுக் கொள்கை என்பது புதியதொரு நிலைப்பாடு அல்ல. ஏற்கனவே, ஆசிய நாடுகளுடனான நெருக்கமே சிறிலங்காவிற்குக் கைகொடுப்பதாகவுள்ளது.

குறிப்பாக, ஆசியாவிலுள்ள இராணுவ, அரசியல், பொருளாதார ரீதியிலான எல்லாதிக்கச் சக்திகளிடம் இருந்தே தனது அவசர தேவைகளை சிறிலங்கா அரசு பெற்றுக் கொண்டுவருகிறது. குறிப்பாக, யப்பான், தென்கொரியா சிறிலங்காவிற்கு அதிகளவு நிதியுதவி அளிக்கும் நாடாகவுள்ளன. சீனா, பாகிஸ்தான் என்பன உயர்ந்த பட்ச இராணுவ உதவி அளிக்கும் நாடாகவுள்ளன. இந்தியா தேவையின் நிமித்தம் பொருளாதார, இராணுவ உதவி அளிக்கும் நாடாகவுள்ளது.

அணிசேரா நாடுகள் அமைப்பு உருவாக்கம் பெற்ற காலத்திலேயே வெளியுறவுக் கொள்கைகளில் ஆசியாவின் முதன்மை வெளிப்பட்டதாக இருப்பினும், அது படிப்படியாக வளர்ச்சி கண்டுள்ளது என்பதே உண்மையாகும். தற்போதைய உலக பொருளாதார ஒழுங்கு மேற்குலகை நோக்கியதாகப் வெளி

அதாவது, விடுதலைப்புலிகள் வலியுறுத்தும் இரண்டு விடயங்களும் சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் நிலைப்பாட்டிற்கும் மாறானவையல்ல. அதாவது, யுத்த நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம் குறித்துப் பேசுவதற்கும் துணை இராணுக் குழுக்களின் நடவடிக்கைகள் குறித்தும் அவை இணக்கப்பாடானதொரு முடிவையே வெளிப்படுத்தி வருகின்றன. துணை இராணுவக் குழுக்கள் குறித்து அவை பகிரங்க அறிக்கைகளைக்கூட விடுத்துள்ளன.

அத்தோடு நோர்வேயின் ஏற்பாட்டாளர் பாத்திரத்தையும், நோர்வேயில் பேச்சு நடத்துவதையும் அவை வரவேற்பதாகவே மதிப்பிடக்கூடியதாகவுள்ளது. நோர்வேயில் பேச்சுக்களை நடாத்துவது எவருக்கும் பாதகமானது என அவர்கள் கருதுவதோடு, இனப்பிரச்சினையில் ஐரோப்பியாவின் பங்களிப்பையும் அவர்கள் விரும்புவதாக இருக்கக்கூடும்.

இந்த வகையில், இணைத் தலைமை நாடுகளும் சரி, ஐரோப்பிய ஒன்றியமும் சரி சமாதானப் பேச்சுவார்த்தை விடயத்தில் விடுதலைப்புலிகள் மீது அழுத்தம் எதனையும் பிரயோகிப்பதற்கான ஏது நிலை இருப்பதாக இல்லை. அது மட்டுமன்றி இலங்கை இனப் பிரச்சினைக்கு சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காணப்பட யதார்த்த பூர்வமான நடவடிக்கையாக விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டிற்கு ஏற்றதான முயற்சிகளை மேற்கொள்வதே பொருத்தப்பாடான நடவடிக்கையாக இருக்கும்.

- ஜெயராஜ்




# 19-12-2005-
# 25-12-2005

19

யாழ். குடாநாட்டில் பொது மக்கள் மீதும் மாணவர்கள் மீதும் சிறிலங்காப் படையினர் நடத்தி வரும் அராஜகங்களைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய அமைதிப் பேரணியினை தடுத்து நிறுத்தி படையினர் மேற்கொண்ட கோரத்தனமான தாக்குதலில் யாழ். பல்கலைக்கழக பேராசியர், சிரேஷ்ட விரிவுரையாளர், மாணவர்கள் உட்பட 50 இற்கும் மேற்பட்டோர் காயம்.

யாழில் இடம் பெற்றுவரும் படையினரின் அத்துமீறிய செயற்பாட்டைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக சமூகத்தால் நடத்தப்பட்ட பேரணி மீது படையினர் தாக்குதல் நடத்தினர். இதற்கு ஆட்சேபம் தெரிவித்து பேராசிரியர் மோகனதாஸ் தலைமையிலானவர்கள் கண்காணிப்புக் குழுவைச்சந்தித்துப் பேசியுள்ளனர்.



யாழ். பல்கலை கழக மாணவர்களின் பேரணி மீது சிறிலங்கா இராணுவத்தினர் புரிந்த வன்முறையையடுத்து யாழ். பல்கலைக்கழக வளாகத்தைச்சுற்றி சுமார் நானூறிற்கும் மேற்பட்ட சிறிலங்கா படையினர் குவிப்பு.

20

யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக நிலைகொண்டுள்ள இராணுவம் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலில் இரு இராணுவத்தினர் காயம்.

யாழ். நகர் பெருமாள் கோவிலடியில் சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் சுட்டுக் கொலை.

யாழ். . மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம் பரிதிக்கும் யாழ். மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கண்காணிப்பாளராகிய பென் செல்விமெத்தவுக் கிடையேயான சந்திப்பு பளையிலுள்ள அரசியல்துறை செயலகத்தில் இடம் பெற்றது.

தமிழர் தாயகத்திலிருந்து சிறிலங்கா இராணுவம் வெளியேற வேண்டுமென்று வலியுறுத்தி சிறிலங்கா பாராளுமன்றத்தில் தமிழ்தேசியக் கூட்டமைப்பினர் ஆர்பாட்டம் நடத்தினர். இதனால் பாராளுமன்ற செயற்பாடுகள் அனைத்தும் முடக்கம்.

யாழ் .பல்கலைக்கழகத்திற்குள் வேட்டுக்களைத் தீர்த்தவாறு உள் நுழைந்த சிறிலங்கா பொலிசாரும் இராணுவத்தினரும் அங்கு பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியதுடன் பொல்லுகளைக் கொண்டும் தாக்குதல் நடத்தியதோடு ஒரு விரிவுரையாளரையும் இருமாணவர்களையும் கைது செய்தனர்.

யாழ்.இந்துக்கல்லூரி முன்பாக வீதிமறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது சிறிலங்காப்படையினர் கண்முடித்தனமான தாக்குதல் தடத்தியதில் பத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் காயம்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டமையைக் கண்டித்து யாழ். மாவட்ட ஊடகவியலாளர்கள் யாழ். மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்துக்கு முன்னால் மறியல் போராட்டம் நடத்தினர்.



போருக்கான புறநிலையைத் தோற்றுவிப்பதற்காக சிங்கள அரசும் படைத்துறைத் தலைமைகளும் திட்டமிட்டு வருகின்றன. இதனால் சிறிலங்கா அரசாங்கம்மீது அனைத்துலக சமூகம் காத்திரமான அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும் எனத் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சர்வதேச சமூகத்திடம் கேட்டார்.

நோர்வே அரசாங்கத்தின் உயர் மட்ட தூதுக் குழுவினர்களான எரிக்சூல் ஹெய்ம், நோர்வே வெளியுறவுத்துறை அமைச்சின் உயர் அதிகாரி டெரிவிக், நோர்வேதூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர், வெளியுறவுத்துறை அமைச்சின் அதிகாரி சொண்ட்றே ஆகியோருடனான சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

21

யாழ்.இல் சிறிலங்கா இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் இரு படையினர் பலி. ஒன்பது பேர் காயம்.

யாழ். புங்குடுதீவில் சுற்றி வளைப்புத் தேடுதல் நடவடிக்கையை மேற் கொண்ட சிறிலங்கா படையினர், 12 பேரை கைது செய்தனர்.

புங்குடுதீவில் சிறிலங்கா கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி படுகொலை செய்யப்பட்ட தர்சினியின் கொலையைக் கண்டித்து கிளிநொச்சியில் மக்கள் கண்டனப் பேரணி நடத்தினர்.

22

யாழ். தினக்குரல் பத்திரிகை அலுவலகத்திற்கு முன்னால் தமிழ் தேசியப் பற்றாளர் கிருஷ்ணர் நவரத்தினம் சிறிலங்கா இராணுவப் புலனாய்வாளர்களாலும் ஈ.பி.டி.பி தேசத் துரோகக் கும்பலாலும் சுட்டுக் கொலை.

தவறுதலான வெடி விபத்தொன்றின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

23

தற்போது ஏற்பட்டிருக்கும் சிறிலங்கா படையினரது அடாவடி நிலைமைகள் தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் தூதுக்குழு ஒன்று இந்தியத்தூதுவர் நிருபமராவை சந்தித்து விளக்கியது.

சிறிங்கா கடற்படையினரின் வாகனத் தொடரணி பேசாலைப் பகுதியில் கிளைமோர்த் தாக்குதலுக்குள்ளானதில் 13 கடற்படையினர் கொல்லப்பட்டனர். 17 பேர் காயம்.

மன்னார் போசாலையில் சிறிலங்கா கடற்படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தையடுத்து அப்பகுதிக்குச் சென்ற இராணுவத்தினர் நூறு வீட்டுத்திட்ட பகுதியிலுள்ள வீடுகளை எரித்து அடாவடித்தனங்களை மேற்கொண்டனர்.

மன்னார் நகரில் மூடப்பட்டிருந்த விடுதலைப்புலிகளின் நிர்வாக செயலகம் சிறிலங்கா படையினரால் எரியூட்டப்பட்டது.

24

சிறிலங்கா படையினருக்கும் மக்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலையைக் கட்டுப்படுத்துவதானால் உடனடியாக யுத்த நிறுத்த அமுலாக்கம் உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் நோர்வேயில் முதற்கட்டமாக யுத்த நிறுத்த அமுலாக்கம் குறித்த பேச்சுவார்த்தைகளை நடத்தலாம் என்பதில் எமது தலைமைப் பீடம் உறுதியாக உள்ளதெனவும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் இணைத்தலைமை நாடுகளிடம் தெரிவிப்பு.



திருகோணமலை உவர்மலைப் பகுதியில் வைத்து இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கிலக்காகி ஒருவர் பலி.

யாழ். விளையாட்டரங்கப் பகுதியில் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒரு பெண் உட்பட ஐந்து பேர் பலி.

யாழ். ஐந்து சந்திக்கு அருகில் சிறிலங்கா படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி இரு இளைஞர்கள் படுகாயம்.

25

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் அவர்கள் மட்டக்களப்பிலுள்ள புனித மரியாள் இணைப் பேராலயத்தில் நத்தார் நள்ளிரவு ஆராதனையின் போது படுகொலை செய்யப்பட்டார். இச்சம்பவத்தின் போது அவரது மனைவி சுகுணம் பரராச சிங்கம் உட்பட எட்டுப் பேர் காயம்.



யாழ். குடாநாட்டில் படையினர் நடத்திய இருவேறு தாக்குதல்களில் மூன்று பேர் பலி.

மன்னார் பேசாலையில் சிறிலங்காப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட கிளேமோர்த்தாக்குதலையடுத்து படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின் போது காணாமல் போன ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த நால்வரும் சடலமாக மீட்பு.

# தமிழீழத்தை நிறுவுவதன் மூலம் தான் மக்களின் நிம்மதியான வாழ்வைக்கட்டியெழுப்ப முடியும்

## தமிழீழ கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை

(அலுவலகசெய்தியாளர்)

சுதந்திர தமிழீழத்தை நிறுவுவதன் மூலம் தான் எங்கள் மக்களின் துயர் நிறைந்த வாழ்வைப்போக்கி நாம் அமைதியான வாழ்வை கட்டியெழுப்ப முடியும் என்பதை சிறிலங்கா தேசம் சுனாமி மீள்கட்டுமான நடவடிக்கைகள் மூலம் மீண்டும் எமக்கு நிரூபித்துக் காட்டியுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ கடற்படைச் சிறப்புத்தளபதி கேணல் சூசை.

சுனாமியால் அழிவடைந்த முல்லைத் தீவில் நேற்று முன்தினம் விசேட பிரார்த்தனை நிகழ்வுகள் இடம் பெற்றன. முல்லை கடற்கரையோரத்தில் அமைக்கப்பட்ட சுனாமி நினைவாலயத்தில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் கலந்து சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

கேணல் சூசை அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

கடலின் இந்தச்சீற்றம் எங்கள் மக்களையும் காவு கொண்டு விட்டது. இலங்கையில் பேரழிவைச்சந்தித்த மக்களாக தமிழ் மக்கள் இருந்தார்கள்.பேரழிவைச்சந்தித்த வட-கிழக்கு மக்களின் உயிரற்ற உடல்களையும், தப்பியிருந்த மக்களையும் மீட்பதற்கு தலைவர் பணித்திருந்தார். அதன்படி எம்மால் போகக்கூடிய அனைத்து இடங்களுக்கும் சென்று நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம். இதற்காக தலைவர் போராளிகள், பொறுப்பாளர்கள் அனைவரையுமே சுனாமிக்களத்தில் இறக்கியிருந்தார்.

பாதிக்கப்பட்டு உறவுகளையும், உடமைகளையும் இழந்து தவித்துக்கொண்டிருந்த மக்களை மீட்கின்ற செயற்பாடுகளில் சுனாமி அடித்த சில நிமிடங்களிலேயே நாம் ஈடுபட்டோம். ஆனால் சிறிலங்கா அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு விட்டார்கள் என்று மகிழ்வான செய்தியாக அறிவித்தது. இதனை அனைவருமே அறிந்திருப்பார்கள்.

எமது தலைவரின் கட்டளைகளுக்கமைவாக சுனாமி மீட்பில் திறமையாகவும் வேகமாகவும் செயற்பட்டதை அமெரிக்காவின் நியூஓர்லியன்ஸ் மாநிலத்தில் கற்றினா சூறாவளி மீட்பு நடவடிக்கையுடன் ஒப்பிட்டு பலர் பாராட்டி எழுதியிருந்தனர்.

மனித வாழ்வில் எவற்றை எல்லாம் இழக்கக்கூடாதோ அவற்றை எல்லாம் இழந்து வேதனைப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களின் துன்பத்தை துடைப்பதே எமது பணி. இதற்காக எமது போராட்டம், அதன் இலட்சியங்களை எல்லாம் ஒருபுறம் தள்ளிவைத்து விட்டு எமது தலைவர் மிகவும் இறுக்கமான நிலையில் இருந்து விலகி சுனாமிப்பொதுக்கட்டமைப்பு உடன்பாடு ஒன்றை உருவாக்கினார். அதனைக்கூட ஏற்றுக்கொள்ளாமல் செயலிழக்



கலைத்து விட்டது சிறிலங்கா அரசு.

சுனாமிப்பேரலைகளின் கோரவெறிக்கிலக்காகிய இலங்கைத்தீவில் பேரழிவைச்சந்தித்தது தமிழீழத்தின் வடக்கு, கிழக்குப்பகுதிகள் தான். மூன்றில் இரண்டு பங்கு அழிவையும் சந்தித்தது எங்கள் மக்கள் தான். எங்கள் மக்களின் சிதைந்து போன வாழ்வைக்கட்டியெழுப்புவதற்காக தேசியத்தலைவர் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்த கடுமையாக முயன்றார். அதன் விளைவாக பொதுக்கட்டமைப்பு எட்டப்பட்டது. ஆனாலும் இந்த உடன்பாட்டை மகிந்த அரசு தூக்கியெறிந்துவிட்டது. இதிலிருந்து புரிந்துகொள்ள வேண்டியது சுதந்திரமான தமிழீழத்தாயகத்தை நிறுவுவதன் ஊடாகத்தான் எங்கள் மக்களின் அவல வாழ்வை போக்கி நிம்மதியான வாழ்வைத் தலைவரின் வழிகாட்டலில் கட்டியெழுப்ப முடியும் என்பதே என்றார். (லோ)

## மட்டு. விமான படைத்தளம் அருகே சோதனைச் சாவடி மீது தாக்குதல்

மட்டக்களப்பு புதுநகரில் வலையிறவு சிறிலங்கா விமானப்படைத்தளம் அருகே உள்ள சோதனைச்சாவடி மீது நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு நகரிலிருந்து மேற்காக நான்கு கிலோமீற்றர் தொலைவில் இந்த விமான நிலையம் அமைந்துள்ளது.

சோதனைச் சாவடியில் கடமையில் நின்றிருந்த நான்கு பேர் மீதும் துப்பாக்கிதாரிகள் தாக்குதல் நடத்தினர். தாக்குதல் நடந்த பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியாகும்.

## நெற்பயிர் செய்கைக்கான பயிற்சித்திட்டம் ஆரம்பம்

(அலுவலகசெய்தியாளர்)

மன்னார் மாவட்டத்தில் நெற்பயிற் செய்கைக்கான பயிற்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஐ.எஸ்.ஓ. மற்றும் டானிடா நிறுவனங்களின் 2,26,000 ரூபா நிதியுதவியுடன் மன்னார் மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தினால் நெற்பயிற்செய்கைக்கான பயிற்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சித்திட்டத்திற்கு மன்னார் மாவட்டத்தில் மடு அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இருகிராமங்களில் தலா பத்து பயனாளிகள் வீதம் 20பேரும், மாந்தை மேற்கு உதவி அரசாங்கஅதிபர் பிரிவில் வெள்ளாங்குளத்தில் பத்துப் பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டனர் இவர்களுக்கு ஏக்கர் ஒன்றிற்கு பயிற்செய்கைக்கான உள்ளீடுகள் வழங்கப்பட்டன. (தீ.கு)

# அறிவித்தல்

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஜெயபுரம் வடக்கு கிராமசேவகர் பிரிவில் சுண்ணாவில் கிராமத்தில் வருடாந்த உத்தரவுப் பத்திரங்கள் மூலம் (1989ஆம் ஆண்டில்) காணிவழங்கப்பட்டவர்களும் வேறு வகையில் காணி வழங்கப்பட்டவர்களும் 10.01.2006 முன் எமது செயலக காணி வெளிக்கள உத்தியோகத்தர்களுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**உதவி அரசாங்க அதிபர்,**
**பூநகரி.**

(7191)

# முக்கிய அறிவித்தல்

## *வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2005*

**எதிர்வரும் 2005.12.31 ஆம் நாள் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பரந்தனில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதனால் உறுப்புரிமை பெற்றுள்ள அனைத்து உரிமையாளர்களையும், சாரதி/நடத்துனர்களையும் தவறாது இப்பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

*தலைவர்*
*கோ.கஜேந்திரசிங்கம்*
*வ.பி.பா.ஊ.கூ.சங்கம்*
*பரந்தன்.*

*செயலாளர்,*
*சி.இரத்தினாகரன்*
*வ.பி.பா.ஊ.கூ.சங்கம்*
*பரந்தன்.*

(சி.13631)

# 75 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



மானுடத்தின் மகத்துவமறிந்து
மகத்தான மக்கள் பணியாற்றும்
எம் ஊர் தலைவரே!
வைரவிழா காணும் இந்த
வயதிலும்
வைரமான உம் சமூகப்பணி
நூற்றாண்டையும் காண
வாழ்த்துகிறோம் வாழ்க!
வளமுடன்!



**நாகநாதி சின்னையா**
**28.12.2005**

குறிப்பு:- இன்று பி.பகல் 3.00 மணிக்கு இவரது இல்லத்தில் இடம்பெறும் நிகழ்வில் கலந்துசிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கிராம அமைப்புக்கள்,**
**ஊற்றுப்புலம்,**
**கிளிநொச்சி.**

(சி.13634)

SRI LANKA RED CROSS SOCIETY

# SRI LANKA RED CROSS SOCIETY

**In cooperation with the Sri Lanka Red Cross Society, Kilinochchi Branch**

Seeks to fill the following position in its project implementation office in Kilinochchi with a person best meeting the qualifications and work experience. We offer long term contracts and an attractive remuneration package.

**PNS LIAISON OFFICER**

Duties and Responsibilities:

The job of Liaison Officer is to facilitate and arrange documentation for Red Cross delegates, vehicles, and cargo in LTTE controlled areas, to set up and maintain an office consistent with the work required, and to maintain knowledge of acquisition and import of materials.

**Qualification, Skill and Experience Requirements**

- Flexibility and ability to manage problems on his/her own
- Diplomatic and a team player
- Fluency in English as well as Tamil, with good knowledge of spoken Sinhala
- Ability to interpret and translate
- Minimum 5 years practical experience in office and administration work
- Experience of working with the Red Cross/Red Crescent movement
- Valid driver's licence
- Skill in use of computer applications for email, MS Word and Excel
- Ability to work under stress and possible long working hours.

**Deadline for applications: 31st December, 2005.**

Applications should be sent to the following address:

Hon.Chairman/Hon.Secretary
Sri Lanka Red Cross Society
Kilinochchi branch.

(சி.13625)

# முக்கிய அறிவித்தல்
# கரைச்சிப்பிரதேசசபை, கிளிநொச்சி

## மணல், கிறவல்,கிறவல்கல்,ஊரி என்பன வழங்குவதற்கானகட்டணமும் உரிமமும்

**01.01.2006 முதல் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபையின் ஆளுகைக் குட்பட்ட பிரதேசங்களில் கட்டடம் அமைத்தல், வீதி அமைத்தல் போன்ற தேவைகளுக்குக்கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் மணல், கிறவல், கிறவல் கல்,ஊரி ஆகியவற்றை உரிய நடைமுறைக்கமைய பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறில்லாமல் இவற்றை சட்டவிரோதமாக அகழ்ந்தேற்றினால் தண்டம் அறவிடப்படுவதுடன் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.**

| பொருள் விபரம் | கட்டணம் | அகழ்ந்தேற்றும் இடங்கள் / விநியோகிக்கும் இடங்கள் | அனுமதி பெறும் இடங்கள் |
|---|---|---|---|
| மணல் | ரூபா 850.00 [உழவு இயந்திரசுமை] | 0 கோணாவில் பாடசாலை அருகாமை<br>0 கல்லாறு நலன்புரிநிலைய அருகாமை<br>0 கல்மடுநகர் மூலிகைத்தோட்ட அருகாமை<br>0 புதுமுறிப்பு<br>0 இரணைமடுச்சந்தி<br>0 ஸ்கந்தபுரம் | அதே இடங்களில் உள்ள கரைச்சிப்பிரதேசசபையின் மணல் விநியோகநிலையங்கள் |
| கிறவல்<br>கிறவல் கல் | ரூபா.200.00 [ஒருகன மீற்றர்] | 0 புதுமுறிப்புப்பிரதேசம்<br>0 கல்மடுநகர் பிரதேசம்<br>0 அக்கராயன் 4ஆம் கட்டைப் பிரதேசம் | சமூகசேவை நிதிய அலுவலகம் தமிழீழ நிர்வாகசேவை, கிளிநொச்சி |
| ஊரி<br>தரம் 02 மண் [குடிசார்வேலைகளுக் கானது.] | ரூபா.150.00 [ஒரு கனமீற்றர் ரூபா 150.00 [ஒருகன மீற்றர்] | 0 பளை, பூநகரி பிரதேசம்<br>0அனுமதிக்கப்பட்ட பிரதேசம் | |

**பொன்.நித்தியானந்தம்,**
**விசேட ஆணையாளர்.**

(சி.13656)

# இந்தியா பாகிஸ்தான் மூன்றாவது சுற்றுப்பேச்சு சனவரியில்

(புதுடில்லி)

பாகிஸ்தானும் இந்தியாவும் தமக்கிடையிலான மூன்றாவது சுற்றுச்சமாதானப் பேச்சுக்களை எதிர்வரும் சனவரி மாதம் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளன.

இருநாடுகளின் வெளியுறவு அமைச்சின் செயலாளர்கள் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளார்கள். காஷ்மீரின் ஷியாச்சின் பனிமலைப்பகுதியிலிருந்து துருப்பினரை வாபஸ்பெறுவதுமுதல் வணிகமற்றும் தொடர்புத்துறை அபிவிருத்தி வரையிலான பலதரப்பட்ட விடயங்கள் குறித்து இவர்கள் ஆராயவுள்ளார்கள் என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சு அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஆரம்பமான இப்பேச்சுக்கள் இரண்டு நாடுகளுக்கிடையிலான பதற்றத்தைத்தணித்த அதேவேளை முக்கிய முரண்பாடான சர்ச்சைக்குரிய காஷ்மீருக்குரிய அந்தஸ்து குறித்தும் தீர்வு காணத் தவறிவிட்டது என்றும் செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# தீவிரவாதிகள் ஊடுருவலைக் கண்காணிக்க கடற்படைக்கு விமானி இல்லாத விமானங்கள்

(கொச்சி)

இந்தியக்கடல் எல்லைப்பகுதிகளில் தீவிரவாதிகளின் ஊடுருவலைக் கண்காணிப்பதற்காக விமானி இல்லாமல் இயங்கும் எட்டு விமானங்கள் கொச்சிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

கேரள மாநிலம் கொச்சியில் இந்தியாவில் மிக முக்கியமான கடற்படைத்தளம் உள்ளது. இங்கிருந்து தென்மாநில கடல் எல்லைப்பகுதி முழுவதும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. உலங்கு வானூர்திகள், ரோந்து கப்பல்கள் மூலம் கப்பல் படையினர் கண்காணிப்புப்பணியில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

தற்போது முதன்முதலாக விமானி இல்லாத விமானங்களைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கென தனியாக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் கட்டுப்பாட்டில் செர்ச்சர் மற்றும் ஹெரன்ரான் ரக அதிநவீன விமானி இல்லாத விமானங்கள் பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

ஹெரன்ரான் ரக விமானத்தைத் தொடர்ந்து 18 மணிநேரம் இயக்க முடியும்.

மணிக்கு 198 கி.மீ. வேகத்தில் பறக்கக்கூடிய இந்த விமானங்களில் தானியங்கி வீடியோ கருவிகள் பொருத்தப்பட்டிருக்கும். இதில் பதிவாகும் காட்சிகள் உடனுக்குடன் கொச்சியிலுள்ள கடற்படைத்தளத்திற்கு அனுப்பி வைக்கப்படும். சுனாமி பேரலை வருவதை கூட இந்த விமானம் முன்கூட்டியே கண்டுபிடித்து விடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.



காரைக்காலில் உள்ள மண்டபத்தூரில் தொண்டு நிறுவனங்களால் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு கட்டப்பட்ட குடியிருப்புக்கள்

# ஐதராபாத்தில் சுனாமி எச்சரிக்கை மையம்

(ஐதராபாத்)

ஐதராபாத்திலுள்ள இந்திய தேசிய பெருங்கடல் தகவல் சேவை மையத்தில் கடந்த இரண்டு மாதங்களாகத் தற்காலிக சுனாமி எச்சரிக்கை மையம் 24 மணி நேரமும் இயங்கி வருகிறது.

இது குறித்து அரசு வட்டாரச் செய்திகள் கூறியதாவது;

வாரத்தில் ஏழு நாட்களும் 24 மணிநேரமும் சுனாமி எச்சரிக்கை மையத்தில் நிலநடுக்கம் குறித்த தகவல்கள் பெறப்படுகின்றன. இந்தத்தகவல்கள் பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம், யப்பான் வானிலை ஆய்வு நிறுவனம் மற்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் ஆகியவற்றின் மூலம் பெறப்பட்டுவருகின்றது.

கடலுக்குள் 6.5 ரிச்டர் அளவு பூகம்பம் ஏற்பட்டால் அடுத்த ஒரு மணிநேரத்தில் அருகிலுள்ள கடற்கரையை சுனாமிப் பேரலைகள் தாக்கலாம். கடலுக்கடியில் பூகம்பம் ஏற்பட்ட அடுத்த ஐந்து அல்லது பத்து நிமிடங்களில் சுனாமி எச்சரிக்கைத் தகவல் சென்னையிலுள்ள தேசிய கடலாய்வுத் தொழில்நுட்ப நிறுவனத்திற்குக்கிடைக்கும்.இதற்காக கடல்நீர் மட்டம் உயர்வதை அறிய இரண்டு மிதக்கும் அளவைகள் கார்நிகோபார் மற்றும் போர்ட்பிளேர் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. இதே போன்ற மிதக்கும் அளவைகள் கிழக்குக்கடற்கரைப்பகுதியில் ஐந்தாறு இடங்களில் விரைவில் நிறுவப்படும். இவ்வாறு இந்திய அரசு வட்டாரச் செய்திகள் கூறுகின்றன.



புதுச்சேரியில் இருந்து கடலூருக்கு இரு கைகள் கட்டப்பட்ட நிலையில் கடலில் நீந்தி சாதனை படைத்த வீர இளைஞர் பிரேம் ஆனந்திற்கு ஆளுனர் சசன்தீப்சிங்பேடி நினைவுப் பரிசைவழங்கினார்.


# FORUT
*Campaign for Development & Solidarity*

**AN ORGANISATION PROMOTING ALCOHOL, DRUG , AND SMOKE FREE ENVIRONMENT**

**VACANCY Announcement: ENGINEER / TECHNICAL OFFICER (Civil)**

**FORUT**, an international NGO working in Sri Lanka since 1982, is inviting application from qualified and experienced personnel to work with the poor and affected population to uplift their living standard, by adopting participatory working methods. The candidates are expected to be team workers who could work with the project teams to increase the efficiency and effectiveness.

| Minimum Requirement | Main Tasks and Responsibilities |
|---|---|
| o An Engineering Degree in related field with minimum of 3 years experience,or<br>o National Diploma in Technology (NDT)-Civil , with five year experience in construction works,<br>**and**<br>o Proven skills in English and Tamil, Knowledge of Sinhala would be desired<br>o Very good Computer literacy, Valid Driving License, at least for Motor bicycle. | o Prepare plans, drawings and estimates for construction and renovation works,<br>o Prepare documents for tenders, evaluate and give recommendation,<br>o Inspect and supervise project implementation at sites and provide technical guidance and advice to ensure quality and timely execution of projects.<br>o Check quantities in bills submitted by partner organization and attend to certification of same.<br>o Prepare procurement plans for infrastructure projects.<br>o Continuously assess the construction and renovation works to determine whether the results serve the indented purposes. |

**Qualified Females are encouraged to apply**. Duration of contract will be one year with possible extensions. **Only short listed candidates will be called for interview.**

Completed applications should be forwarded to reach Programme Manager, FORUT Vanni, 155th Mile Post, Jaffna-Kandy Road, Killinochchi **on or before 7th of January 2006**.

E-Mail :- are.eriksen@forut.lk

(சி.13657)



# துயர் பகிர்வு

திருமதி.ஜே.திரேசா குரூஸ் சுகந்தி.
ஜே.டிலக்சன்

**"துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.ஏ. ஜே.குரூஸ் அவர்களின் அன்புச்சகோதரி திருமதி ஜே.திரேசா குரூஸ் சுகந்தி அவர்களும் அவரது மகனான டிலக்சன் அவர்களும் அகாலச்சாவு எய்தியதனால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் குடும்பத்தாருடனும், உறவினருடனும் நாமும் இணைந்து துயர்பகர்கின்றோம்."**

**சு.பரந்தாமன்,**
**பிரதிக்கல்விப்பணிப்பாளர் (நிர்),**
**வலயக் கல்விப் அலுவலகம், துணுக்காய்.**



## மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் (வ.து).

# பதவி வெற்றிடம்

கீழ்க்குறிப்பிடப்படும் சாரதி பதவிக்குப் புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தின் எல்லைப்பரப்பிலுள்ள நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்கத்தகுதியுடையவர்கள் தாமாகவே விண்ணப்பப்பத்திரங்களைத் தயாரித்து எதிர்வரும் 2006.01.07 ஆம் திகதிக்கு முன் தலைவர், புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்,புதுக்குடியிருப்பு என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப் பிவைத் தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பதவி:- சாரதி**

சம்பள குறியீட்டு இலக்கம்:- 312/13

சம்பளஅளவுத்திட்டம்:- 7750-75x10-80x10-9300
அத்துடன் காலத்திற்குக்காலம் வழங்கப்படும் சம்பள அதிகரிப்பும் உண்டு.

**தகுதிகாண் காலம்:-06 மாதங்கள்**
**தகைமைகள்:-**

01.05ஆம் வகுப்புச்சித்தியுடன் பஸ்,லொறி.உழவு இயந்திரம் பெட்டியுடன் செலுத்துவதற்கேற்ப சாரதி அனுமதிப்பத்திரம் அத்துடன் 04 வருட அனுபவம்.

02.வயதெல்லை 30 இற்கும் 45 இற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

03.கொழும்பு சென்று வரக்கூடிய வாகனம் செலுத்துவதற்கேற்ப அனுபவம்.

**தலைவர்,**
**புதுக்குடியிருப்பு ப.நோ. கூ.சங்கம் (வ.து)**
**மு/புதுக்குடியிருப்பு.**

(சி.13634)

# மாவீரர் வெற்றிக்கிண்ண தெரிவுப்போட்டி



(அலுவலக செய்தியாளர்)

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டு வீரர்களுக்கான மாவீரர் வெற்றிக்கிண்ணத்திற்கான தெரிவுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை பரந்தன் இளைஞர் வட்டமைதானத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி சங்கத்தலைவர் பரஞ்சோதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்புரையினை விளையாட்டுத்துறைப்பொறுப்பாளர் பாப்பா ஆற்றினார்.

தொடர்ந்து விளையாட்டு வீர்களுக்கு இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினரால் உதைப்பந்தாட்ட சீருடைகள் வழங்கப்பட்டது.

இதனை இளையோர் செயற்பாட்டு நிறுவன செயலாளர் அன்ரன் அன்பழகன் விளையாட்டுதுறைப் பொறுப்பாளர் பாப்பா ஆகியோர் வழங்கிவைத்தனர். (கு.தீ)

# கிளி. விளையாட்டுக்கழகங்களுக்கு சீருடைகள் அன்பளிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கி வரும் விளையாட்டுக் கழகங்களுக்கு சீருடைகளை தமிழீழ விளையாட்டுத்துறையினர் அன்பளிப்புச் செய்து வருகின்றனர். இதன் ஒரு கட்டமாக கடந்த திங்களன்று கிளிநொச்சி மாவட்டத்தில்






இயங்கி வரும் 16 விளையாட்டுக்கழகங்களுக்கு சீருடைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. பிற்பகல் நான்கு மணியளவில் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் வைத்து இச்சீருடைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (ச)

# குசேயின் சதத்தினால் அவுஸ்திரேலியா நிமிர்ந்தது!



மெல்பேர்னில் நடைபெறும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மைக்கல் குசே பொறுப்பான ஆட்டத்தின் மூலம் பெற்ற சதத்தின் உதவியால் அவ்வணி சரிவில் இருந்து மீண்டுள்ளது.

நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவின் நெல் மற்றும் பொலக்கின் பந்து வீச்சில் அணித்தலைவர் பொண்டிங்கைவிட ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் வரிசை சிதைவுக்குள்ளான நிலையில் அன்றைய ஆட்டநேர முடிவில் எட்டுவிக்கெட்டுக்களை இழந்து 239 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்த நிலையில் நேற்றுக்காலை ஆட்டத்தை தொடர்ந்த குசே, மெக்ராத்தின் ஒத்துழைப்புடன் தனது சதத்தைப் பூர்த்தி செய்தார். அவர் 14 பவுண்டரிகள் நான்கு சிக்சர்கள் அடங்கலாக 122 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.



மெக்ராத் இறுதிவரை ஆட்டமிழக்காது 11 ஓட்டங்களைப் பெற்றார். பிரட்லீ நான்கு ஓட்டங்களில் நேற்று ஆட்டமிழந்தார் அந்த வகையில் அவுஸ்திரேலியா 355 என்ற காத்திரமான ஓட்டத்தைப் பெற்று ஆட்டமிழந்தது.



பந்து வீச்சில் நெல் நான்கு விக்கெட்டுகளையும் என்ரினி, பொலக் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதல் இனிங்சை ஆடத்தொடங்கிய தென்னாபிரிக்கா நேற்றைய ஆட்டநேர முடிவில் இரண்டு விக்கெட்டுக்களையிழந்து 169 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அணித்தலைவர் சிமித் 22 ஓட்டங்களையும் வில்லியர்ஸ் 61 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் மெக்ராத், பிரட்லீ இருவரும் ஒவ்வொரு விக்கெட்டுக்களை எல்.பி டபிள்யூ மூலம் பெற்றனர்.

இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# இந்திய பொலிஸ் குழு பாகிஸ்தான் பயணம்

பாகிஸ்தானுடன் இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் மற்றும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் பங்கு தொள்ளவிருக்கும் நிலையில் அங்கு பாதுகாப்பு நிலவரம் குறித்து ஆராயவென ஐந்து பேர் கொண்ட பொலிஸ் குழுவொன்று பாகிஸ்தான் சென்றுள்ளது.

வரும் சனவரி ஐந்தாம் திகதி பாகிஸ்தான் செல்லும் இந்திய அணி மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் ஐந்து ஒரு நாள் போட்டிகளிலும் கலந்து கொள்ளும். இந்திய சுற்றுப்பயணம் உறுதி செய்யப்பட்டபோதும் கராச்சியில் வன்செயல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால் பாதுகாப்பு தொடர்பில் அணி கவலை கொண்டுள் ளது.

பாகிஸ்தான் வருகைதந்த இங்கிலாந்து அணி கராச்சியில் ஒருநாள் போட்டியில் பங்கு கொண்டபோதும் டெஸ்ட் போட்டியில் விளையாட மறுப்பு தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இந்திய பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டித்தொடரை கண்டுகளிக்க உதவியாக பாகிஸ்தான் அரசு எண்ணாயிரம் இந்திய ரசிகர்களுக்கு விசா வழங்க முன்வந்துள்ளது. இதற்கிடையில் அண்மையில் நடைபெற்ற இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டிகள் வெளிச்சம் போதாத குறைபாடு காணப்பட்டதை இத்தொடரின்போது சரி செய்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

–சிறிலங்கா–நியூசிலாந்து–

# ஒரு நாள் போட்டித் தொடர் டிச.31 இல் ஆரம்பம்

சிறிலங்கா கிரிக்கெட் அணி கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடியது. அப்போது முதல் போட்டி முடிந்த நிலையில் சுனாமியால் சிறிலங்கா கடும் பாதிப்பு அடைந்ததைத் தொடர்ந்து அந்த அணி தொடரை பாதியில் முடித்துவிட்டு நாடு திரும்பியது. முதல் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்றிருந்தது. சுனாமி காரணமாக தள்ளி வைக்கப்பட்ட அந்த நான்கு ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடர் நியூசிலாந்தில் டிச.13இல் ஆரம்பமாகவுள்ளது.



சிறிலங்கா- நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான நான்கு ஒரு நாள் போட்டி கொண்ட தொடரின் முதல் ஆட்டம் வருகிற 31-ஆம் திகதி குயீன்ஸ்டவுனில், இரண்டாவது போட்டி சனவரி மூன்றாம் திகதி கிறிஸ்ட்சர்ச்சிலும், மூன்றாவது போட்டி சனவரி ஆறாம்திகதி வெலிங்டனிலும், நான்காவது மற்றும் கடைசிப் போட்டி நேப்பியரிலும் நடைபெறும். சிறிலங்கா நியூசிலாந்து அணிகளைப் பொறுத்தவரையில் இரு அணிகளும் சமபலத்துடன் உள்ளதுபோல் தோன்றுகிறது. எனினும் சிறிலங்கா அணி சமீபத்தில் நடந்த இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் போட்டித் தொடரை ஒன்றுக்கு ஆறு என்ற கணக்கில் கோட்டைவிட்டது. இது அந்த அணியின் மோசமான நிலையையே காட்டுகிறது. மேலும் நியூசிலாந்து அணியினர் சொந்த மண்ணில் ஆடுவதால் அற்புதமான ஆட்டத்தை வெளிபடுத்தக்கூடும்.

அணி விபரம்:-

சிறிலங்கா:- அத்தப்பத்து (அணித்தலைவர்) வாஸ், ஜெயசூரிய, ஜெயவர்த்தன, சங்கக்கார, டில்சான்,தரங்க, மகரூப், முரளிதரன், குணவர்த்தன, மலிங்க பண்டாரா.முபாரக், அர்னால்டு, பெரேரா, பெர்னாண்டோ.

நியூசிலாந்து :- ஸ்டீபன் பிளமிங் (அணித்தலைவர்) டேனியல் வெட்டோரி (துணைத்தலைவர்) டம்ஸ், ஷேன் பொண்ட், கிறிஸ் கெய்ன்ஸ், பீற்றர் புல்டன், ஜாமி ஹவ், மார்ஷல், மெக்குலம், மில்ஸ், ஜேக்கப் ஓரம், ஸ்டைரிஸ், வின்சென்ட்.




# பாகிஸ்தானில் இந்திய அணிக்கு அதிர்ச்சி காத்திருக்கிறதாம்!

–முன்னாள் பாக். தலைவர் மொய்ன்கான்–

இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் அடுத்தமாதம் ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் கிரிக்கெட் தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள பாகிஸ்தானின் முன்னாள் அணித்தலைவர் மொய்ன்கான் இந்திய அணிக்கு பெரும் அதிர்ச்சி காத்திருப்பதாக கூறியுள்ளார்.

குறிப்பாக மீண்டும் இந்திய அணியில் இடம்பிடித்துள்ள சவ்ரவ் கங்குலிக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கிறார். அவர் மேலும் குறிப்பிடும் போது, இன்சமாம் உல்ஹக் தலைமையிலான பாகிஸ்தான் அணி தற்போது நல்ல அனுபவம் பெற்ற ஒருங்கிணைத்த அணியாக திகழ்வதாக கூறியதுடன் சமீபத்தில் இங்கிலாந்துடனான தொடரை வென்றதன் மூலம் நம்பிக்கையுடனும் இந்திய அணியை சந்திக்க ஆர்வமுடனும் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

கங்குலியின் விடயத்தில் அணி குழப்பமடையாமால் திடமாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள அவர் கங்குலி அனுபவமுள்ள வீரர், அவருக்கு மதிப்பளிக்க வேண்டும். அவர் வெளியிலிருப்பதைவிட அணியிலிருப்பதே நல்லது என்றும் மொய்ன்கான் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் கிரிக்கெட் அணி மார்ச்சில் இல.வருகிறது

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வருகிற மார்ச்மாதம் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இலங்கையில் பயணம் செய்து ஐந்து ஒரு நாள் போட்டி கொண்ட தொடரில் ஆடத்திட்டமிட்டிருந்தது. ஆனால் தற்போது பெப்ரவரி மாதம் 16 முதல் 28 வரை பாகிஸ்தானில் நடப்பதாக இருந்த ஆசிய கோப்பை போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. புதிய அட்டவணைப்படி பாகிஸ்தான் இலங்கை அணி இலங்கையில் இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒரு நாள் போட்டிகளில் ஆடும்.

இவ்விரு அணிகள் இடையிலான ஒரு நாள் போட்டிகள் பெப்ரவரி 18,20 மற்றும் 23 ஆகிய திகதிகளில் நடைபெறும் அதனைத்தொடர்ந்து டெஸ்ட் தொடர் இடம்பெறும். முதல் டெஸ்ட் மார்ச் 31ஆம் திகதி முதல் ஏப்ரல் நான்காம் திகதி வரையும், இரண்டாவது டெஸ்ட் போட்டி ஏப்ரல் எட்டாம் திகதி முதல் 12ஆம் திகதி வரையும் நடக்கிறது. இதற்கான பாகிஸ்தான் அணி மார்ச் 12ஆம் திகதி இலங்கை வருகிறது.

## சிந்தனைக்கு



தேசாபிமான உணர்வானது மக்களை ஆழமாகப் பற்றிக் கொள்ளும் பொழுதுதான் ஒரு தேசம் தனக்கே உரித்தான-தனித்துவமான-ஆளுமையைப் பெறுகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி 28.12.2005

தொலைபேசி 060-2213244

தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## ஏன் இந்தப் புறக்கணிப்பு!

மாமனிதர் ஜோசப் பரராசசிங்கத்தின் படுகொலை குறித்து சர்வதேச சமூகம் கொண்டுள்ள அக்கறை, கரிசனை என்பன குறித்து தமிழ்மக்கள் மத்தியில் இன்று பலமானதொரு கேள்வி எழுந்துள்ளதோடு, இனிமேல் சர்வதேசத்தின் கவலைகள் குறித்து தமிழ்மக்கள் அக்கறை காட்டவேண்டுமா? என்ற கேள்வியையும் எழவைத்துள்ளது.

மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் அவர்கள் ஒரு பாராளுமன்ற அரசியல்வாதி. அவர் தனது அரசியல் பணியை இன்று - அதாவது இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக முனைப்புப் பெற்றதன் பின்னர் ஆரம்பித்தவர் அல்லர். தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் பல தசாப்தங்கள் கட்சி அரசியலுக்குள் செயற்பட்டவர்.

இதன் விளைவாக, 1990ஆம் ஆண்டில் இருந்து பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வந்துள்ளதோடு, சார்க் பாராளுமன்ற உறுப்பினராகவும், கொமன்வெல்த் பாராளுமன்ற செயற்குழு உறுப்பினராகவும் அவர் பதவி வகித்து வந்தவராகும். அதாவது, ஒரு சிரேஷ்ட பாராளுமன்ற அரசியல் வாதியாகச் செயற்பட்டவர்.

இதேசமயம், அவரின் மற்றொரு பக்க நடவடிக்கை அவரை ஒரு மனித உரிமைகள் ஆர்வலராக அடையாளம் காட்டியும் உள்ளது. வடக்கு-கிழக்கில் சிறிலங்கா அரசின் பாரிய படையெடுப்புக்கள், இன அழிப்பு நடவடிக்கைகள் என்பனவற்றின்போதும், சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னரும் அவர் மனித உரிமைகள் செயற்பாட்டாளராக, அதற்கென சர்வதேச மட்டத்தில் குரல் கொடுப்பவராகவும் இருந்துள்ளார். இதேசமயம், வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராகவும் பங்காற்றியுள்ளார்.

இந்த வகையில், மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் அவர்கள் ஒரு சனநாயகவாதியாகவும், மனித உரிமைகள் வாதியாகவும் அடையாளம் காணப்படுவதற்கு அனைத்து வகையிலும் உரித்துடையவர். ஆனால், இச்சனநாயகவாதி, மனித உரிமைகள்வாதி படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக தென்னிலங்கையிலும் சரி, உலக நாடுகள், சர்வதேச அமைப்புக்களும் சரி இதுவரை நாம் அறிந்த ரீதியில் எங்கிருந்தும் அனுதாபமோ கவலையோ வெளியிடப்பட்டதாக இல்லை.

இதற்குக் காரணம் அமரர் ஜோசப்பரராசசிங்கம் அவர்கள் தமிழ் தேசியத்திற்காக உழைத்தமைக்காகவா? அதாவது தம் இனமக்களுக்காகவும், அவர்களின் உரிமைக்காகவும் குரல் கொடுத்தமைக்காகவா? அன்றி சிறிலங்கா அரசின் இன அழிப்புச் செயற்பாடுகளையும், ஒடுக்குமுறைகளையும் சர்வதேசத்தின் முன் எடுத்துச் சென்றமைக்காகவா?

அவ்வாறு இல்லாதுவிடில், தமிழ்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டுடன் செயற்படுகின்றார்கள் என்பதற்காகவா? அதாவது, தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தை ஆதரிக்கும் எவரும் படுகொலை செய்யப்படலாம் அன்றி அவர்கள் எவருக்குமே மனித உரிமைகள் கிடையாது என்ற அடிப்படையிலா?

இவை எதுவுமே இல்லாதுவிடில், சிறிலங்கா பேரினவாத ஆட்சியாளர்கள் அன்றி ஆட்சிக்கு ஆதரவளிக்கும் பேரினவாதிகளின் அச்சுறுத்தலுக்குப் பணிந்து பயந்துவிட்டார்களா? அதாவது அண்மைக்காலத்தில் சர்வதேச அமைப்புகளுக்கும், சர்வதேச நாடுகளுக்கும் சிறிலங்கா பேரினவாத சக்திகள் விடுத்த அச்சுறுத்தல்களுக்குப் பணிந்துபோய்விட்டார்களா?

எடுத்துக்காட்டாக, வடக்கு-கிழக்கு அபிவிருத்திப் பணிகள், சிறிலங்கா ஆயுதப்படையின் மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் என்பன தொடர்பாக சர்வதேச நாடுகளோ அன்றி அமைப்புக்களோ எச்சரிக்கை விடுக்கும்போது அவ் அமைப்புக்கள் மீதும், அவ் அமைப்பின் பிரதிநிதிகள் மீதும் சிறிலங்கா பேரினவாத சக்திகள் கடும் சீற்றத்தை வெளிப்படுத்துவதுண்டு.

இந்த வகையில், ஐ.நா. அமைப்புக்கள், உலக வங்கி உட்பட பல அமைப்புக்களும் அதிகாரிகளும் கண்டனத்திற்கு உள்ளாகியதுண்டு. இந்த வகையில், முன்னாள் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலைக்கு கவலை தெரிவித்தமைக்காகவும், சுனாமி அனர்த்தம் தொடர்பாக கண்காணிப்பதற்கென ஐ.நா விசேட பிரதிநிதியாக வந்த முன்னாள் அமெரிக்க சனாதிபதி சனாதிபதி பில்கிளிங்டனை தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்தாமைக்காகவும் பேரினவாத சக்திகள் வெளிக்காட்டிய சீற்றம் கண்டு அவை பயந்துபோய்விட்டனவா?

சிறிலங்கா அரசின் கைக்கூலிகளாக, இனவிரோதிகளாக சிறிலங்கா அரசின் படுகொலைகளையும், இன அழிப்பு நடவடிக்கைகளையும் நியாயப்படுத்தியவர்களாக என்றும் பொய்யர்களாக இருந்தவர்களின் மரணங்களுக்காக கவலை கொண்டவர்கள், கண்டனம் வெளியிட்டவர்கள், ஒரு மக்கள் பிரதிநிதியாக, சனநாயகவாதியாக, மனித உரிமை ஆர்வலராகச் செயற்பட்டவரின் படுகொலை குறித்து மௌனம் சாதிப்பதும், கண்டுகொள்ளாதது போல் இருப்பதும் தமிழ் மக்களிடையே பெரும் அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது. இதன் விளைவாக சர்வதேச நாடுகளின், அமைப்புக்களின் கவலைகள், கருத்துக்கள் என்பன குறித்து இனித் தாம் செவிசாய்க்க வேண்டுமா? என்ற கேள்வியையும் அவர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

# சிறிலங்காப் படையினரின் அராஜகத்தை எதிர்த்து மன்னாரில் இன்று பூரணகதவடைப்பு

(மன்னார்)

சிறிலங்காப் படையினரின் மக்கள் மீதான அராஜக நடவடிக்கையைக் கண்டித்து இன்று மன்னாரில் பூரண கதவடைப்பு இடம்பெறவுள்ளது. மன்னார் மாவட்டதேசிய எழுச்சிப் பேரவை இதற்கான அழைப்பை நேற்று வெளியிட்டது.

அண்மைக்காலமாக சிங்களப் படைகள் தமிழர் தாயகப்பகுதியில் மேற்கொண்டுவரும் மிலேச்சத்தமான நடவடிக்கைகளின் வரிசையில் புங்குடுதீவில் தர்சினி என்ற இளம் பெண் சிறிலங்காக கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்குட்பட்டு கொலை செய்யப்பட்டதும் அதனைத் தொடர்ந்து மன்னார் பேசாலை 100 வீட்டுத்திட்டப்பகுதியில் நான்கு வயது குழந்தை உட்பட தமிழ்ப் பெண்களுமாக நான்கு பேர் வெட்டியும் அடித்தும் கொடூரமாக கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன் நீண்டகாலமாக தேச விடுதலையையும் தமிழீழ மக்களையும் நேசித்து தாயக விடுதலைக்கான பாதைக்கு குரல் கொடுத்துவந்த வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராசசிங்கம் அவர்கள் திட்டமிட்டரீதியில் சிங்களப் படைகளின் உந்துதலுடன் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மேற்படி கொலைகளை நாம் வன்மையாக கண்டிப்பதுடன் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று மாவட்டம் தழுவிய கடையடைப்பு ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளது.

# பேரினவாத அரசின் திட்டமிட்ட நடவடிக்கையை கண்டித்து புதுக்குடியிருப்பில் மக்கள் பேரணி

(புதுக்குடியிருப்பு)

சிறிலங்கா பேரினவாத அரசின் திட்டமிட்ட நடவடிக்கையில் அரசின் கூலிப்படைகள் மேற்கொண்டுவரும் கண்மூடித்தனமான செயற்பாடுகளைக் கண்டித்து நாளை புதுக்குடியிருப்பில் கண்டனப்பேரணியும், மகஜர் கையளிப்பும் இடம்பெறவுள்ளது.

பல்கலைக்கழகம் மீதான தாக்குதல், நெடுந்தீவில் யுவதி மீது பாலியல்வல்லுறவு, மன்னாரிலும், யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்ற படுகொலைகள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப்பரராசசிங்கம் அவர்கள் படுகொலை உட்பட வடகிழக்கில் சிறிலங்காக கூலிப்படைகள் புரிந்து வரும் தமிழ்மக்கள் மீதான வெறியாட்டத்தைக் கண்டித்தே இக் கண்டனப்பேரணி இடம்பெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலை முன்னால் ஆரம்பமாகும் கண்டனப் பேரணி புதுக்குடியிருப்புச் சந்தியில் முடிவடையும். இதன்போது சர்வதேச நாடுகளுக்கான மகஜரும் கையளிக்கப்படவுள்ளன. இக் கண்டனப் பேரணியை முல்லை. மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது. (08)

## பாண்டிருப்பில் தாக்குதல் பொலிஸ் பலி; மற்றொருவர் காயம்

அம்பாறையில் இனந் தெரியாதோரின் தாக்குதலில் சிறிலங்காப் பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் காயமடைந்தார். இச்சம்பவம்நேற்று நடைபெற்றது.

பாண்டிருப்பு மாரியம்மன் கோவில் வீதியால் நீதிமன்ற வேலைகள் நிமித்தம் உந்துருளியில் பயணித்துக்கொண்டிருந்த இரு பொலிசார் மீது துவிச்சக்கரவண்டியில் வந்த இனந்தெரியாதோர் நேற்று நண்பகல் 1.20 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் நற்பிட்டிமுனையைச் சேர்ந்த முகமட் நியாஸ்(வயது-32) படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு மரணமாகியுள்ளதாகவும், இச்சம்பவத்தின் போது காயமடைந்த மற்றொருவரான காரைதீவைச் சேர்ந்த நவரத்தினம்(வயது-30), கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச் சம்பவத்தின் பின் விசேட அதிரடிப்படையினரால் அவ்விடம் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## பயணத் திகதி முடிவில்லை

(கொழும்பு)

சிறிலங்கா அமைதி முயற்சிகளுக்கான நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் சிறிலங்கா வருகை தரவுள்ளதாக நோர்வேத் தூதரகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு வரமுன்னராக இந்தியாவுக்கு எரிக்சூல்ஹெய்ம் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று இந்தியாவில் நடைபெறும் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் இலங்கைக்கான பயண நாள் அறிவிக்கப்படும் என்றும் நோர்வேத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சிறிலங்காவின் சனாதிபதி நேற்று இந்தியா பயணம்

(கொழும்பு)

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முற்பகல் 11.30 இற்கு இந்தியாவுக்கு புறப்பட்டுச் சென்றார். பதவியேற்ற பின்னர் சனாதிபதி மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டு விஜயம் இதுவாகும். இவரோடு இந்தியா பயணமாக விருந்த இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் கடைசி நேரத்தில் தனது பயணத்தை இரத்துச்செய்தார்.

தமது விஜயத்தின்போது இந்திய சனாதிபதி அப்துல்கலாம், பிரதமமந்திரி மன்மோகன்சிங், காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா, ஜெயராம் ஆகியோரையும் மகிந்த சந்திக்கவுள்ளார். ஆனால் அங்கே தமிழ்தேசிய உணர்வாளர்கள் அவருக்கு எதிர்பை வெளிக்காட்டத் தயாராகவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## வவுனியாவில் நேற்று துக்கதினம்

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தில் நேற்றையதினம் பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. மாமனிதர் ஜோசப் பரராசசிங்கத்தின் மீதான தாக்குதலைக் கண்டித்தும், அவரின் புகழுடல் வவுனியாவுக்கு கொண்டு வருவதை முன்னிட்டும் வடகிழக்கு பிரதேசத்தில் இடம்பெற்று வரும் மக்களுக்கு எதிரான தாக்குதலைக் கண்டித்தும் இந்த துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது, வவுனியா நகர்ப் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தகநிலையங்களும் மூடப்பட்டு இருந்ததுடன் தொலைத்தொடர்பு நிலையங்கள், உணவகங்கள் மருந்து விற்பனை நிலையங்கள் மட்டும் திறந்து வைக்கப்பட்டிருந்தன. வெளி இடங்களுக்கான போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. வர்த்தக நிலையங்களில கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டிருந்தன. (21)

# சுனாமி அழிவிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்ப 2.1 பில்லியன் டொலர் நிதியுதவி தேவை


– அரச தரப்பில் தெரிவிப்பு

(கொழும்பு)

கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நாட்டை முழுமையாகக்கட்டியெழுப்புவதற்கு இன்னும் 2.1 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வேண்டுமென நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய அமைப்புத் தெரிவித்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு 45 வீதமான நிதியும், தெற்கு மாகாணத்துக்கு 25.9 வீதமும், வடக்கு மற்றும் மேற்கு மாகாணங்களுக்கு 19 வீதமும், 10.1 வீத நிதியுதவியும் தேவைப்படுவதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

உலக வங்கி வழங்கிய 150 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியில் 30 மில்லியன் டொலர் அவசர உதவிகளுக்கும், 75 மில்லியன் டொலர் பாதிக்கப்பட்ட அரசாங்கப் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கும், 45 மில்லியன் டொலர் நிதியுதவிக் கடனாகவும் வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு 53 ஆயிரத்து 221 தற்காலிக கூடாரங்கள் கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டதாகவும், இரண்டாயிரத்து 138 தற்காலிக கூடாரங்கள் வழங்குவதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய அமைப்பு மேலும் தெரிவித்தது.

மாமனிதர் ஜோசப்பரராசசிங்கம் அவர்களின் புகழுடல் எடுத்துவரப்படுவதையும் , மூத்ததளபதி பொட்டம்மான் அவர்கள் இறுதிவணக்கம் செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

# மாமனிதர் ஜோசப் பரராசசிங்கத்தின் புகழுடலுக்கு இன்று கிளிநொச்சி,முல்லையில் இறுதி வணக்கம்

. மாமனிதர் ஜோசப்பரராசசிங்கத்தின் புகழுடல் இன்று கிளிநொச்சி, முல்லைத்தீவின் பல பகுதிகளில் மக்களின் இறுதி வணக்கத்திற்காக வைக்கப்படவுள்ளது. சிறிலங்கா புலனாய்வுத் துறையினரும் அதனோடு இணைந்த ஒட்டுக்குழுக்களும் இணைந்து படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் ஜோசப் பரராசசிங்கத்தின் புகழுடல் இன்று காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட மக்களின் வணக்கத்திற்காக வைக்கப்பட்டு நிகழ்வு நடைபெற ஏற்பாடாகியுள்ளது. மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் அவர்களுக்கு அனைத்து அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், கூட்டுறவாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் அனைவரையும் கலந்து வணக்கம் செலுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட தேசிய "எழுச்சிப்பேரவை" கேட்டுக் கொண்டுள்ளது.

மாமனிதர் அவர்களின் புகழுடல் கிளிநொச்சி பாரதிபுரம் சந்தியில் இருந்து ஊர்வலமாக பண்பாட்டு மண்டபத்திற்கு எடுத்து வரப்படவுள்ளமையினால், இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றனர்.

அத்துடன் மாமனிதருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக அனைத்துத் திணைக்களங்கள், நிறுவனங்கள் பொதுஇடங்களில் கறுப்புக் கொடிகள் கட்டி உணர்வலைகளை வெளிப்படுத்துமாறு வேண்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் வணக்க நிகழ்வு நடைபெற்று பரந்தன், தருமபுரம், விசுவமடு பிரதேசங்கள் ஊடாக முல்லைத்தீவு செல்லும்போதும் அவ்வப் பிரதேசங்களில் மலர் வணக்க நிகழ்வு நடைபெறவுள்ளமையினால் பரந்தன், தருமபுரம், விசுவமடு பிரதேச மக்கள் அவ்விடங்களில் அஞ்சலி செலுத்த ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதென அறியத் தருவதாக தேசிய எழுச்சிப்பேரவை தெரிவித்துள்ளது மாமனிதர் ஜோசப்பரராசசிங்கம் அவர்களின் புகழுடல் இன்று பிற்பகல் 1.00 மணிக்கு மக்களின் இறுதி அஞ்சலிக்காக புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியா சாலையில் வைக்கப்படவுள்ளது.

புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் துர்க்காவீதிச் சந்தியிலிருந்து மாமனிதர் ஜோசப்பரராசசிங்கம் அவர்களது புகழுடல் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் ஊர்வலமாக புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலைக்கு எடுத்து வரப்படவுள்ளது.

இவ் இறுதி அஞ்சலி நிகழ்வில் அனைவரையும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்துமாறு முல்லை மாவட்டதேசிய எழுச்சிப்பேரவையினர் கேட்டுள்ளனர். (08)

# படையினரின் வெறியாட்டத்தை எதிர்த்து திருமலையில் நேற்று கதவடைப்பு

(திருமலை)

சிறிலங்காப்படைகளினால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் வெறியாட்டத்தைக் கண்டித்தும், மாமனிதர் ஜோசப்பரராசசிங்கம் அவர்களின் படுகொலையைக் கண்டித்தும் நேற்று திருகோணமலை மாவட்டத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் துக்கநாள் மற்றும் கதவடைப்பினால் திருகோணமலையின் இயல்புநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டது.

திருமலை மாவட்டத்தின் பலபகுதிகளில் கடைகள், வணிக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்ததுடன், நிறுவனங்கள் ஊழியர்களின் வரவின்மையால் வெறிச்சோடிக்கிடக்கின்றன.

# மாமனிதரின் புகழுடலுக்கு வவுனியாவில் இறுதி வணக்கம்

(செட்டிகுளம்)

மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினர் மற்றும் ஒட்டுக்குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப்பரராசசிங்கத்தின் புகழுடல் நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு வவுனியாவில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு எடுத்து வரப்பட்டது. இந்தப் புகழுடலுடன் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர் மற்றும் மட்டகளப்பு மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வி தங்கேஸ்வரி மற்றும் கனகசபை ஆகியோரும் வருகைதந்தனர். மட்டக்களப்பில் இருந்து வவுனியாவினை நோக்கி நேற்றுக்காலை 9.45 மணிக்குஎடுத்துவரப்பட்ட ஜோசப் பரராச சிங்கத்தின் புகழுடல் நேற்று பி ப. 2.30 மணிக்கு வவுனியாவுக்கு கொண்டுவரப்பட்டது. நேரடியாக வவுனியா முத்தையா மண்டபத்தில் விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட மேடையில் அன்னாரின் புகழுடல் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

வவுனியாவில் இருந்து போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் வழித்துணையுடனும் பொலிசாரின் பாதுகாப்புடனும் ஓமந்தை வரை புகழுடல் எடுத்துச்செல்லப்பட்டது. முன்னதாக நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் பலரும் கலந்துகொண்டு தமது இறுதி வணக்கத்தினை செலுத்தினார்கள். எஸ்.என்.ஜி. நாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலரும் உரையாற்றினார்கள். (21)

## படையினரின்...

துப்பாக்கிச்சூட்டில் பொதுமக்கள் மூவர் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்த பொது மக்கள் மூவரும் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். காயமடைந்தோர் விபரம்:-

நல்லதம்பி தங்கராசா (வயது-40) பொலிகண்டி, கந்தையா சுப்பிரமணியம் (வயது-53) தும்பளை, செல்வி சிவகௌரி சுப்பிரமணியம் (வயது-24) புலோலி. இதேவேளை சுமார் 25 பொதுமக்களும் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (27,37,கா)

## பருத்தித்துறையில்..

சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் பலாலி இராணுவ வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர்.

அதேவேளை உயிரிழந்தசிப்பாய்களது சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டது. இதேவேளை இக்கிளைமோர் குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்ட பகுதி மக்கள் குடியிருப்பற்ற பகுதியாகவே தெரிவு செய்து தாக்குதலாளிகள் குண்டை வெடிக்கவைத்துள்ளனர். தாக்குதல் சம்பவம் நடைபெற்றதன் பின்னர் 524படையணி முகாமிலுள் சிறிலங்கா வான் படை உலங்கு வானூர்தி மூன்று தடவைகள் தரையிறங்கிச் சென்றன. (27,37,கா)

## தமிழ்..

புரிந்துகொள்ளவேண்டும் தமிழர்கள் எந்த அச்சுறுத்தலுக்கும், பணியப்போவதில்லை. பொங்கி யெழும், மக்கள் படையென பெரும் எழுச்சிகொண்டுள்ளோம். கொல்லப்படும் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் ஈடாக பத்து சிங்களப்படை வீரர்கள் கொல்லப்படுவார்கள்.

அல்லலுறும் மக்கள் மத்தியில் சில புல்லுருவிகள் சிங்கள இன வெறியர்களுக்கு துணை போகின்றனர். இப்புல்லுருவிகளுக்கு சொல்லி வைக்கின்றோம்: அவலப்படும் மக்களை மிதித்துக்கொண்டு உங்களது தன்னல வேட்டையை இனியும், தொடராதீர் தமிழ் தேசியத்தை நேசியுங்கள் தமிழ் தேசியம், துரோகங்களை பொறுத்துக் கொள்ளப்போவதில்லை எனவே திருந்திக்கொள்ளுங்கள்.

சிங்களப்படையே உனது அடாவடித்தனத்தை நிறுத்து தமிழன் அஞ்சி வாழ்ந்த காலம் பழங்கதையாகிவிட்டது. பொங்கியெழும் மக்கள் படை பழிவாங்கியே தீரும் எனவே தமிழ் மக்களை அழிப்பதை நிறுத்தி உனது ஊருக்கு ஓடும் வழியைத் தேடிக்கொள்.

## படையினரால்..

பகுதிக்கு இவர்கள் வந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. உயிரிழந்த யுவதி கோணாவில் கிளிநொச்சியைச் சேர்ந்த சோமசுந்தரம் பரமேஸ்வரி (வயது-26) என அடையாளங் காணப்பட்டுள்ளார். இருதய நோயாளியான இவர் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்திருந்ததாகக் கூறப்படுகின்றது.

மற்றைய ஆண்களில் இருவரில் ஒருவர் பளையைச் சேர்ந்தவரான திருநாவுக்கரசு ஜெயகாந்தன் (வயது-26)எனஅடையாளங்காணப்பட்டுள்ளார். வர்த்தகரான இவர் வியாபார நடவடிக்கைகளிற்காக நகர்ப்பகுதிக்கு வந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. மற்றையவர் கனகராயன் குளத்தைச் சேர்ந்தவரான இரட்ணகுமார் குணசேகர் (வயது-19) என அடையாளங்காணப்பட்டுள்ளார். தச்சுத் தொழிலாளியான இவர் நகர்ப்பகுதியில் தங்கியிருந்து வேலைசெய்துவந்ததாகக் கூறப்படுகின்றது.

நேற்று யாழ் போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் வைத்து அடையாளங் காணப்பட்ட மூன்று சடலங்களையும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகன உதவியுடன் சொந்தஇடங்களிற்கு கொண்டு செல்வதற்கான உத்தரவை பதில் நீதவான் திருமதி சரோஜினி இளங்கோவன் பிறப்பித்திருந்தார். (27,37)

## மாமனிதர்..

ஓமந்தை முன்னணி பிரதேசத்தில் வைத்து அவரது புகழுடலை விடுதலைப்புலிகளும், வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தினரும் பொறுப்பேற்றனர். விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் அருட்திரு கருணாரட்ணம் அடிகளார் ஆகியோர் முன்னணிப் பிரதேசத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

அங்கிருந்து தமிழீழ காவல் துறையினரின் அணிவகுப்புடன் எடுத்துச்செல்லப்பட்ட புகழுடல் புளியங்குளம், கனகராயன்குளம், மாங்குளம் ஆகிய இடங்களில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அந்தந்த இடங்களிலுள்ள தேசிய எழுச்சிப் பேரவையினரால் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு அஞ்சலிக் கூட்டங்களும் இடம் பெற்றன.பின்னர் கிளிநொச்சிக்கு புகழுடல் எடுத்துச்செல்லப்பட்டது. இங்கு மூத்த தளபதி ச.பொட்டு அம்மான் அவர்கள், அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், தளபதி கேணல் ரமேஸ், தூயவன் அரசறிவியல் கல்லூரிப் பொறுப்பாளர் பார்த்தீபன் மற்றும் தமிழ் தேசியக்கூட்டமைப்பு பாராளு மன்ற உறுப்பினர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பல நூற்றுக் கணக்கானோர் வணக்கம் செலுத்தியுள்ளனர்.


மாமனிதருக்கு எம் வணக்கம்



ஒன்றே தமிழீழம் என்று முழங்கிய மாமனிதருக்கு எம் வணக்கம்!


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.